20 Years of DINA KURAL CELEBRATING The Only Voice of Truth

Reg.No. TNTAM/2014/62347

Website: www.dinakuralnews.in

Cell: 94433 46004

தினகுரல்

Dinakural Tamil Daily

தேசிய நடுநிலை நாளிதழ்

dinakuraldaily dinakuralmedia dinakuraldaily

Postal Registered No. TB/CDL/15/2023/2025

DINAKURAL DIPR · DAVP EMPANALED NEWS PAPER

· சென்னை · அக்டோபர் 19-10-2026 திங்கட்கிழமை · சென்னை, கடலூர், புதுச்சேரி, கோயம்புத்தூர் பதிப்புகளில் இருந்து வெளியாகிறது · 12 பக்கம் · மலர் 25 · இதழ் 294 · ₹9 ஆண்டு சந்தா ₹3285

ஆயுத பூஜை, விஜயதசமி விழா களைகட்டியது

10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்குப் பயணம்

சென்னை, அக்.19: ஆயுத பூஜை, விஜயதசமி பண்டிகைகளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பூஜை பொருட்களை வாங்குவதற்காகத் திரண்ட பொதுமக்களால் கடை வீதிகள் மற்றும் முக்கிய சந்தைகள் களைகட்டின. சென்னையில் இருந்து சொந்த ஊருக்கு 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

தமிழகம் முழுவதும்இன்று ஆயுத பூஜை கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முக்கியச் சந்தை பகுதிகள், கடை வீதிகளில் பூஜை பொருட்கள் வாங்குவதற்காகக் கடந்த 2 நாட்களாக ஏராளமான பொதுமக்கள் திரண்டு வருகின்றனர். சென்னையில் கோயம்பேடு, பாரிமுனை, தி.நகர், பெரம்பூர், புரசைவாக்கம், வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட முக்கிய சந்தை பகுதிகள் காலை முதலே பரபரப்பாகக் காணப்பட்டன.

குறிப்பாக ஆயுத பூஜையை முன்னிட்டு கோயம்பேட்டில் சிறப்புச் சந்தை ஒரு வாரம் நடைபெறுகிறது. இதில் பொரி, கடலை, வாழைப்பழம், இலை, தேங்காய், பழங்கள் உள்ளிட்ட பூஜை பொருட்களை விற்பனை செய்ய தனியாக ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கும் அமோகமாக விற்பனை நடைபெற்றது.

அதேநேரம் பொருட்கள் மற்றும் பூக்களின் விலை வழக்கத்தைவிட அதிகரித்து இருந்தது. ஒரு கிலோ மல்லி ரூ.400-ல் இருந்து ரூ.1,500 வரை தரத்துக்கு ஏற்ப விற்பனையானது. அதேபோல் சம்பங்கி ரூ.100-ல் இருந்து ரூ.250 வரையும், ஜாதிமல்லி ரூ.400 வரையும், முல்லை ரூ.250 வரையும் விற்பனையாகின.

ரோஜா ரூ.110-க்கும், சம்பங்கி ரூ.100-க்கும் விற்பனையானது. சில்லறை வியாபாரிகளும் கடைகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சென்றனர். இதேபோல் வாட்டர் வாஷ் செய்வதற்கும், மெக்கானிக் ஷாப்களில் ஏராளமான வாகனங்கள் குவிந்த வண்ணம் இருந்தன. சுண்டல் உள்ளிட்ட பதார்த்தங்களைச் செய்வதற்கான பொருட்களை வாங்க மளிகை கடைகளிலும் கூட்டம் குவிந்தது.

குறிப்பாக மாலை நேரங்களில் இறுதி நேர வியாபாரம் களைகட்டியது. இவ்வாறு பொருட்களை வாங்கிச் செல்ல ஏராளமான வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வந்த நிலையில், அலுவலகம் முடிந்து வீடு செல்வோர், பண்டிகைக்கு ஊர்களுக்கு செல்வோர் என அணிவகுத்ததால் முக்கிய சாலைகளிலும், புறநகர் பிரதான சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போக்குவரத்து காவலர்கள் கூடுதலாக பணியமர்த்தப்பட்டு, நெரிசலை சீர் செய்தனர். கிளாம்பாக்கம், கோயம்பேடு, மாதவரம், மறைமலைநகர், சிஎம்டிஏ காலனிலைப் பூங்கா உள்ளிட்ட பேருந்து நிலையங்களுக்கு வந்தவர்களுக்காகப் போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வாரத்தின் தொடக்கத்தில் ஆயுதபூஜை வந்த போதும், அதைத் தொடர்ந்து விஜயதசமி என தொடர் விடுமுறை இருப்பதால் பலரும் ஊர்களுக்கு பயணிக்க திட்டமிட்டனர். இதனால் மக்கள் கூட்டம் அலைமோதியது.



ஞாயிறு மற்றும் நாளை திங்கட்கிழமை ஆயுத பூஜை என தொடர் விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊர்களுக்குச் செல்ல எழும்பூர் ரயில் நிலையத்தில் நேற்று குவிந்த பயணிகள் கூட்டம்.

அதன்படி, கடந்த 15, 16, 17 ஆகிய 3 நாட்களில் வழக்கமான பேருந்துகளுடன், சிறப்புப் பேருந்துகளும் சேர்த்து மொத்தம் 10,277 பேருந்துகள் இயக்கப்பட்டன. அதன்மூலம் ரூ.4.25 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர். முன்பதிவு செய்தவர்கள் சம்பந்தப்பட்ட பேருந்திலும், அண்டை மாவட்டங்களில் வசிப்போர் மற்றும் முன்பதிவு செய்யாமல் வந்தவர்கள் பேருந்துக்காகக் காத்திருந்து பயணித்தனர்.

ஆம்னி பேருந்துகளிலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டனர். இதற்கிடையில் நேற்று மாலை முதல் பல்வேறு இடங்களில் மழை பெய்ததால், பேருந்து, ரயில் நிலையங்களுக்குச் செல்ல பொதுமக்கள் சிரமப்பட்டனர். மேலும், டோல்கேட்களில் வாகனங்கள் அதிகரித்ததால் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையே பண்டிகைக் காலத்தில் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக எழுந்த புகார்களைத் தொடர்ந்து, போக்குவரத்து அதிகாரிகள் தமிழகம் முழுவதும் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர். இதுவரை 1,222 ஆம்னி பேருந்துகளில் சோதனை நடத்தப்பட்டு விதிமீறலில் ஈடுபட்ட 207 பேருந்துகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல் ஆயுத பூஜை, விஜயதசமியை முன்னிட்டு ரயில்களில் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக ஏராளமானோர் முன்பதிவு செய்திருந்தனர். சென்னையில் இருந்து கன்னியாகுமரி, போத்தனூர், தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்குச் சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, சென்னை எழும்பூர், சென்ட்ரல், தாம்பரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது. பொதுவாக சென்னை மெட்ரோ ரயிலில் நாள்தோறும் 3 லட்சம் பேரும், வடபழனி - பூந்தமல்லி வழித்தடத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் பயணிக்கும் நிலையில், நேற்று முன்தினமும், நேற்றும் மெட்ரோ ரயில்களில் கூட்டம் நிரம்பி வழிந்தது. வெளியூர் சென்றவர்கள் திரும்பி சென்னை வருவதற்கும் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





தலையங்கம்



19.10.2026 -திங்கள்

விதிமீறல்கள்

போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதத்தில் பெரும்பகுதி வசூலிக்கப்படாமல் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் சூழலில், அபராதத் தொகையை வசூலிக்க அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு வரவேற்கத்தக்கது.

பெரும்பாலான சாலை விபத்துகளுக்குப் போக்குவரத்து விதிமீறல்களே காரணமாக அமைகின்றன. 2025இல், இந்தியாவில் ஒரு நாளுக்கு 502 பேர் சாலை விபத்துகளால் உயிரிழந்துள்ளனர். போக்குவரத்து விதிமீறல்களுக்கு விதிக்கப்பட்டுவந்த அபராதத் தொகையைக் கணிசமான அளவு உயர்த்த மோட்டார் வாகனச் சட்டம் 2019 இயற்றப்பட்டது. சாலை பாதுகாப்புக் கட்டமைப்பைப் பராமரிக்க மாநில அரசுக்கு அபராதத் தொகை பயன்படுகிறது.

தண்டனைகள் முன்பைவிடக் கடுமையாக்கப்பட்ட பிறகும், விதிமீறல்களும் விபத்துகளும் அதிக எண்ணிக்கையில் நிகழ்கின்றன. அபராதத்தை இணையவழியிலும் செலுத்த முடிகிற அளவுக்கு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டாலும் அபராதம் செலுத்துவோர் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளனர்.



சிறுமியின் தாயாருக்கு தவெக நிர்வாகிகள் ஆறுதல்

செஞ்சி அக்19

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த ஏழு வயது சிறுமி ஹேமலதா கடந்த 12ஆம் தேதி அதிகாலை காணாமல் போனார். எட்டுத் தனிபடைகள் அமைத்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் திமுக, அதிமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறி வருகின்றனர். இந்நிலையில் இன்று தமிழக வெற்றிகழகத்தின் விழுப்புரம் வடமேற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் குண.சரவணன்,விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் குஷிமோகன், அரசு வழக்கறிஞர் கந்தவேல் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினர்கள் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த வடமேற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் குண.சரவணன். காவல்துறையினர் தனிப்படை அமைத்து சிறுமியை தீவிரமாக தேடி வருவதாகவும் தவெக நிர்வாகிகளும் காவல்துறைக்கு உதவியாக செயல்பட்டு வருவதாகவும் மேலும் சுவரொட்டிகள் மூலம் சிறுமியை தேடும் பணி நடைபெற்று வருவதாக தெரிவித்தார். மேலும் காவல்துறை கூறும் இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தித்தர தவெக தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.



காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் பண்ருட்டி ஊராட்சி மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் சினேகா தலைமையில் நடைபெற்றது. முகாமில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்துதுறைகள் மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டார். பின்னர் காஞ்சிபுரம் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். முகாமில் கூடுதல் ஆட்சியர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை ஆஷிக் அலி மகளிர் திட்ட இயக்குனர் ஆர்த்தி ஸ்ரீபெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் பாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அனைவரது வாழ்விலும் அனைத்து செல்வங்களும் தழைத்தோங்க வேண்டும்

அஇமுக கட்சியின் தேசிய தலைவர் கோ.சத்தியநாராயணன் விஜயதசமி வாழ்த்து

சென்னை,அக்.19:

அஇமுக கட்சியின் தேசிய தலைவர் கோ.சத்தியநாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அறிவை தரும் கல்வி நம் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. அந்த கல்வியையும், பண்பாடு, கலாச்சாரம், ஞானம், இசை, அறிவுபோன்றவற்றைவழங்கும் சரஸ்வதி தேவியை இன்று போற்றி வணங்குகிறோம்.

விஜயதசமி அன்று தொடங்கும் அனைத்து தொழில்களும், செயல்களும் தெய்வ சக்தியின் அருளால் வெற்றியடையும் என்பது நமது நம்பிக்கை.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதையும்; 'உழைப்பின் மூலமே வெற்றி' என்பதையும் உணர்த்தும்வகையில் ஆயுதபூஜையையும், விஜயதசமியையும் கொண்டாடும் மக்கள் அனைவரது வாழ்விலும் அனைத்து செல்வங்களும் தழைத்தோங்கவேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, அன்பார்ந்த தமிழக மக்கள் அனைவருக்கும் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.





அறிவை தரும் கல்வியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும், வளத்தையும் தரும் இயந்திரங்களை போற்றி வணங்கும் இந்த நன்னாளில், அனைவரும் சரஸ்வதிதேவியின் அருளை பெற்று, கல்வியிலும், தொழில்துறையிலும் சிறந்து விளங்க, சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு அஇமுக கட்சியின் தேசிய தலைவர் கோ.சத்தியநாராயணன் கூறி உள்ளார்.

நம்பிக்கை ! நாணயம் !! கைராசி !!!
100 ஆண்டுகள் பாரம்பரியம் கடலூரில்
60 ஆண்டுகளாக மக்களின்
நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்
RM MAHAVEER JEWELLERY SINCE 1962
RM மஹாவீர் ஜுவல்லரி®
கடலூரில் சன்னதித் தெருவில் கார் பார்க்கிங் வசதியுடன்
பாடலீஸ்வரர் திருக்கோவில் அருகில் இயங்குகிறது.
வாங்கும் பொருட்களுக்கு முறையான ரசீது
எண்.95, சன்னதித் தெரு,
கடலூர்-607 002.
04142-235916, 90033 01322





திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் சுந்தர்ராஜன் தலைமையில் டவுன்ஹாலில் உள்ள எஸ் ஆர் சி ரங்கசாமி மாநாட்டு அரங்கத்தில் திடக்கழிவு மேலாண்மை குறித்து செயற்பொறியாளர்கள் இளநிலை பொறியாளர்கள் உதவி செயல் பொறியாளர்கள் உதவி பொறியாளர்கள் சுகாதார அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆகிய அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது உடன் மாநகர நல அலுவலர் மோகன் உதவி ஆணையாளர்கள் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்



கிருஷ்ணகிரியில் மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம்

கிருஷ்ணகிரி அக்19

கிழக்கு மாவட்டம் பர்கூர் தொகுதி பர்கூர் தனியார் திருமண மண்டபத்தில் மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், தலைமை கழக செயற்குழு உறுப்பினர் ஜெ.கே. கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.சி. நாகராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் காந்தி,அறிஞர், பேரூராட்சித் தலைவர் சந்தோஷ் குமார் போச்சம்பள்ளி ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி காவேரிப்பட்டினம் ஒன்றிய கழகச் செயலாளர் மகேந்திரன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ். பாலாஜி, கவுன்சிலர் கார்த்திக்,திமுக பிரமுகர் குட்டூர் ராஜேஷ், போச்சம்பள்ளி காமராஜ் கல்வி நிறுவனர் கௌதம் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சுப வள்ளி விலாஸ்
61-62, லாரன்ஸ் ரோடு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-2.
39, சுப்புராய செட்டித் தெரு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-2.
235011, 235022, 235033, 235044, 94433 44668



DISCOVER THE PERFECT JEWELLERY FOR YOU
... உங்கள் இல்லத்திலும் தங்க பூக்கள் மலரும்!
PDS சீல்
916 BIS HALLMARK SHOW ROOM
வாடிக்கையாளர்களின் வசதிக்காக கார் பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது

மேன்மைமிகு சார்பு நீதிமன்றம், நெய்வேலி
MCOP No: 131/2024
மைனர் பிரதீஷ்,
மைனர் குழந்தைக்காக இயற்கை காரடியன்
தந்தை ரமேஷ்
நெ: 94, தெற்கு தெரு,
அம்மேரி கிராமம் மற்றும் அஞ்சல்,
விருத்தாசலம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.
.. மனுதாரர்
/எதிர்/
அன்பரசன்
ப.எண்: 13, பு. எண்: 23-ல், விவேகானந்தர் தெரு,
குரும்பலூர் S.O,
பெரம்பலூர் மாவட்டம்.
.. 2-ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மேற்படி எண் வழக்கில் எதிர்மனுதாரர்கள் பேரில் மனுதாரர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய பட்டு மேற்படி வழக்கில் 2-ம் எதிர்மனுதாரர் ஆஜராக 25.11.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. 2-ம் எதிர்மனுதாரருக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமோ காலை 10.30 மணிக்கு ஆஜராகி 2-ம் எதிர்மனுதாரர் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்வது. தவறினால் 2-ம் எதிர்மனுதாரர் பேரில் வழக்கில் ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது..

இடம் : நெய்வேலி
தேதி : 17.10.2026
இப்படிக்கு
A. மூவேந்தன்.,
M.A.,(H.R).,B.L.,
வழக்கறிஞர்,
நெய்வேலி

மேன்மைமிகு சார்பு நீதிமன்றம், நெய்வேலி
HMOP: 8/2026
புவனேஷ்வரி
த/பெ: சின்னதுரை
நெ:24, PMR நகர்,
வடக்குத்து பஞ்சாயத்து,
குறிஞ்சிப்பாடி தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.
.. மனுதாரர்
/எதிர்/
செல்வமணி,
த/பெ: ஜம்புலிங்கம்
நெ:19 A, மேலவீதி
முதனை கிராமம்,
விருத்தாசலம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்
.. எதிர்மனுதாரர்
அறிவிப்பு

மேற்படி எண் வழக்கில் எதிர்மனுதாரர் பேரில் மனுதாரர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய பட்டு மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் ஆஜராக 12.11.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமோ காலை 10.30 மணிக்கு ஆஜராகி எதிர்மனுதாரர் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்வது. தவறினால் எதிர்மனுதாரர் பேரில் வழக்கில் ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது..

இடம் : நெய்வேலி
தேதி : 17.10.2026
இப்படிக்கு
A. மூவேந்தன்.,
M.A.,(H.R).,B.L.,
வழக்கறிஞர்,
நெய்வேலி .

தலைகவசம் உயிர் கவசம்

20 Years of DINA KURAL CELEBRATING The Only Voice of Truth

Reg.No. TNTAM/2014/62347

Website: www.dinakuralnews.in

தினகுரல்

Dinakural Tamil Daily

Cell: 94433 46004

தேசிய நடுநிலை நாளிதழ்

dinakuraldaily dinakuralmedia dinakuraldaily

Postal Registered No. TB/CDL/15/2023/2025

DINAKURAL DIPR - DAVP EMPANALED NEWS PAPER

• சென்னை • அக்டோபர் 19-10-2026 திங்கட்கிழமை • சென்னை, கடலூர், புதுச்சேரி, கோயம்புத்தூர் பதிப்புகளில் இருந்து வெளியாகிறது • 12 பக்கம் • மலர் 25 • இதழ் 294 • ₹9 ஆண்டு சந்தா ₹3285

அனைவருக்கும்

ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி

நல்வாழ்த்துக்கள்!



வெள்ளை தாமரைப் பூவில் இருப்பாள்..
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்..
கொள்ளையின்பம் குலவு கவிதை கூறும்
பாவலர் உள்ளத்திருப்பாள்..!

சேவை ! நல்லாட்சி ! அனைவருக்கும் முன்னேற்றம்

BHARATIYA JANATA PARTY

NAGAR DISTRICT, PUDUCHERRY

JAL JEEVAN MISSION (ஜல் வாழ்க்கை மிஷன்)
14,915 விடுகள் குழாய்த் தண்ணீர் இணைப்பு
390 பள்ளிகள் 413 அங்கன்வாடிகள்
100% இலக்கு அடைந்த புதுச்சேரி (ஜன் 2021)

PMAY - Urban 2.0 (பிரதம மந்திரி அவாஸ் யோஜனா)
1,482 விடுகள் (2025-26ம் மத்திய அரசு அனுமதி)
₹13.34 கோடி மத்திய உதவி
மொத்தம் 1,168 விடுகளுக்கு ₹10.51 கோடி மத்திய உதவி வழங்கியது

PM SVANidhi (பிரதம மந்திரி ஸ்வநிதி)
2,740 தெரு வியாபாரிகள் பயனடைந்தனர் (2023ம் பதிவு)
98% இலக்கு அடைந்து புதுச்சேரி யூ.டி.களில் 3வது இடம்

PM JAN DHAN YOJANA (பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா)
பல லட்சம் மக்கள் வங்கி கணக்கு நிற்ந்து நிதி சேவைகளான பயன்படுத்தி வருகின்றனர்

PM UJJWALA YOJANA (பிரதம மந்திரி உஜ்ஜ்வலா யோஜனா)
பல ஆயிரம் குடும்பங்கள் இலவச LPG இணைப்பு பெற்று பயன்டைந்தனர்

AYUSHMAN BHARAT PM-JAY (ஆயுஷ்மான் பாரத்)
ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை புதுச்சேரியில் பல குடும்பங்கள் பயன்டைந்தனர்

PM MUDRA YOJANA (பிரதம மந்திரி முத்ரா யோஜனா)
சுயதொழில் தொடங்க தொழில் முனைவோர பண் கட்ன் பெற்று வளர்ச்சி அடைந்தனர்

PM JEEVAN JYOTI BIMA YOJANA (பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா)
1.40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர் (2023)
₹2 லட்சம் வாழ்க்கை காப்பு

PM MATRU VANDANA YOJANA (பிரதம மந்திரி மாத்ரு வந்தன் யோஜனா)
கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி புதுச்சேரியில் ஏராளமான குடும்பங்கள் பயனடைந்தனர்

SWACHH BHARAT MISSION (சுவச்ச் பாரத் மிஷன்)
வழிப்னரகள், சுத்தமான கற்றுச்சூழல், ஆரோக்கியமான புதுச்சேரி


DAY-NULM / DAY-NRLM (தேசிய நகர்ப்புற / தேசிய ஊரக வாழ்வாதாரம்)
பெண்கள் குழுக்கள், சுய உதவி குழுக்கள் வாழ்வாதார முன்னேற்றம்

COVID-19 VACCINATION (கோவிட்-19 தடுப்பூசி)
6.10 லட்சத்திற்கும் மேம் மக்கள் தடுப்பூசி பெற்றனர் (புதுச்சேரி)

POSHAN ABHIYAN (போஷண் அபியான்)
அங்கன்வாடி குழந்தைகள் ஊட்டச்ச்த்து ஆதரவு ஆரோக்கியமான எதிர்காலம்

BETI BACHO BETI PADHAO (பெட்டி பச்சாவ் பெட்டி படாவ்)
பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள்







S. Krishnaraj
நகர் மாவட்ட தலைவர்

பாரதிய ஜனதா கட்சி
நகர் மாவட்டம், புதுச்சேரி
BHARATIYA JANATA PARTY
NAGAR DISTRICT, PUDUCHERRY

சினிமா




பாரம்பரிய உடையில் அழகாக காட்சியளிக்கும் நடிகை ஐஸ்வர்யா மேனன்

45% பிசினஸ் பங்களிப்பு அளிக்கும் பெண் ஆலோசகர்கள்: ஐசிஐசிஐ லைஃப் பெருமித அறிவிப்பு!

கோவை, அக், 19: இந்த நவராத்திரி திருநாளை முன்னிட்டு, நிறுவனத்தின் 'நாரிசக்தி' (Narishakti) திட்டத்தின்கீழ் 2027 நிதி ஆண்டின் இறுதிக்குள் இந்தியா முழுவதும் 20,000 பெண் ஆலோசகர்களைப் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் (ICICI Life Insurance) அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி நிறுவனத்தில் உள்ள 78,000-க்கும் மேற்பட்ட பெண் ஆலோசகர்கள் மூலம் நிறுவனத்தின் முகவர் வழியிலான பிசினஸில் 45% பங்களிப்பு கிடைக்கிறது. இந்த அறிவிப்பானது நிறுவனத்தின் 'நாரிசக்தி' திட்டத்தின் 2-ஆம் ஆண்டு தொடக்க விழாவோடு இணைந்து வெளியாகி உள்ளது.

ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி (Chief Distribution Officer) திரு. அமிஷ் பங்கர் கூறுகையில், "ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸில், 'திறமைக்கு பாலினம் இல்லை' என்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

நமது ஆண் காப்பீட்டு ஆலோசகர்களின் செயல்பாடுகளில் தொடர் முன்னேற்றத்தைக் கண்டு வரும் அதே வேளையில், நமது பெண் ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் தேவைகளையும் துல்லியமாகப் புரிந்து கொள்ள எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை. குறிப்பாக, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, நமது மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கையில் பெண் ஆலோசகர்கள் சுமார் 32% பங்கைக் கொண்டுள்ளனர்; மேலும் அவர்கள் நமது முகவர் வழியிலான பிசினஸில் சுமார் 45% பங்களிப்பை வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, பெங்களூரு, கேரளா மற்றும் மும்பை போன்ற பகுதிகளில், முகவர்வழியிலானபிசினஸில்இந்தஎண்ணிக்கை 50%-க்கும் அதிகமான அளவைக் கடந்துள்ளதை நாங்கள் கண்டுள்ளோம். இயல்பான இரக்க குணமும் உத்திசார் சிக்கல் தீர்க்கும் திறனும் கொண்ட இந்தியப் பெண்களுக்கு, இயல்பாகவே அமைந்த சில தனித்துவமான பண்புகள் உள்ளன. இது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளவும், சிறந்த தீர்வுகளை வழங்கவும், விற்பனைக்குப் பிறகும் நீண்டகால உறவுகளைப்பேணவும் அவர்களுக்கு உதவுகிறது. வலுவான உணர்ச்சிப் பிணைப்பு (Emotional quotient), சமூகத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் இயல்பு, அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் குடும்பங்களைப் பாதுகாப்பதில் உள்ள நம்பிக்கை ஆகிய இந்த குணங்கள் காப்பீட்டுத் துறைக்கு மிகவும் முக்கியமானவை.



துல்கர் சல்மானின் அடுத்த திரைப்பயணம் 'ஏ ஓ டி' (AOT)

பன்முகத் திறமை கொண்ட நட்சத்திர நடிகர் துல்கர் சல்மான், 'ஏ ஒ டி' (AOT) திரைப்படத்தின் மூலம் தனது அகில இந்திய அளவிலான ரசிகர் வட்டத்தை மேலும் விரிவுபடுத்துகிறார்.

தனித்துவமான கதை சொல்லும் முறையாலும், வழக்கத்திற்கு மாறான திரைப்பட உருவாக்க அணுகுமுறையாலும் அறியப்படும் பவன் சாதினேனி இப்படத்தை இயக்கியுள்ளார். கீதா ஆர்ட்ஸ் மற்றும் ஸ்வப்னா சினிமா வழங்கும் இப்படத்தை, லைட்பாக்ஸ் மீடியா சார்பில் சந்தீப் குன்னம் மற்றும் ரம்யா குன்னம் ஆகியோர் தயாரிக்கின்றனர்.

இப்படத்தில் ஸ்ருதிஹாசன் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவரது பங்களிப்பு படத்திற்கு மேலும் நட்சத்திர அந்தஸ்தையும், ரசிகர்கள் மத்தியில் கூடுதல் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்து கிறது.

தனித்துவமான கதைகளைத் தேர்ந் தெடுப்பதற்காக அறியப்படும் துல்கர் சல்மான், மீண்டும் ஒரு அழகான திரைப்படத்துடன் ரசிகர்களைச் சந்திக்கிறார். இப்படத்தில் அவர் இணைந்திருப்பதே ரசிகர்கள் மத்தியில் நேர்மறையான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், படத்தின் மீதான ஆர்வத்தையும் அதிகரித்துள்ளது.

இப்படத்திற்கு ஒளிப்பதிவாளர் சுஜித் சாரங் கிராமப்புற வாழ்க்கையின் இயல்பையும் அழகையும் உண்மைத்தன்மையுடன் காட்சிப்படுத்தியுள்ளார். அதேபோல், ஜி.வி. பிரகாஷ்குமார் தனது உணர்வுப்பூர்வமான பின்னணி இசையின் மூலம் படத்தின் உணர்வுகளின் தாக்கத்தை மேலும் அதிகரித்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் அகில இந்திய அளவில் இப்படம் திரையரங்குகளில் வெளியாகத் தயாராகி வருகிறது.

ஸ்வப்னா சினிமா மற்றும் கீதா ஆர்ட்ஸ் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்கள் வழங்கும் இப்படம், 'மகாநதி', 'சீதா ராமம்', 'கல்கி 2898 AD' ஆகிய படங்களின் மூலம் உருவான மறக்க முடியாத கூட்டணிக்குப் பிறகு, துல்கர் சல்மானை ஸ்வப்னா சினிமாவுடன் மீண்டும் இணைக்கிறது. வரும் நவம்பர் 20ஆம் தேதி வெளியாகவுள்ள 'ஏ ஒ டி' திரைப்படம், இந்த நிறுவனங்களின் வெற்றிப் பயணத்தில் மேலும் ஒரு மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



குழந்தைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தும் 'ஜாது' (Jadhu)

சென்னை, அக், 19: சென்னையைச்சேர்ந்த டிஜிட்டல் தெரபியூடிக்ஸ் நிறுவனமான ரீவின் ஹெல்த், மாற்றுத்திறனாளி குழந்தைகள், இளம் வயதினர் மற்றும் பெரியவர்களுக்கான இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அன்றாட வாழ்க்கைதிறன் தளமான 'ஜாது'வை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது.

"தமிழ்நாட்டில் உள்ள பல குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நோயை கண்டறிய, சிகிச்சை நேரத்திற்காக, அல்லது ஒரு நிபுணர் தங்கள் குழந்தையைப் பார்க்க நேரம் ஒதுக்குவதற்காகக் காத்திருப்பதாக கூறுகிறார்கள். அதைப் போக்கும் வகையில் ஜாது உருவாக்கப்பட்டுள்ளது," என்று ரீவின் ஹெல்த் நிறுவனத்தின் நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான விஜய் கருணாகரன் கூறினார்.



ரோட்டரி மாவட்டம் 3234 சார்பில் நவராத்திரி திருநாளை முன்னிட்டு இளைஞர்களிடையே தொற்றா நோய்களைத் தடுப்பதற்காக 'சுவாஸ்த் சங்கல்ப்' சுகாதார உறுதிமொழி தொடக்கம்

சென்னை, அக், 19: தடுப்பு சுகாதாரத் துறையில் ஒரு முக்கிய முன்னெடுப்பாக, ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3234 மாதவ் நீரிழிவு மையத்துடன் இணைந்து தனது முதன்மையான சுகாதார உறுதிமொழி இயக்கமான "சுவாஸ்த் சங்கல்ப்" திட்டத்தை ஆசன் மெமோரியல் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது. உலக ளாவிய தொற்றா நோய் இயக்கத்தின் "தலைமை தாங்க வேண்டிய நேரம்" என்ற மையக் கருப்பொருளுக்கு இணங்க, இந்நிகழ்ச்சி ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. இதில் பல்வேறு இன்டராக்ட் பள்ளிகள் மற்றும் ரோட்டராக்ட் கல்லூரிகளைச் சேர்ந்த 1,000-க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் நேரிலும், இணைய வழி மூலமாகவும் கலந்துகொண்டனர். பரவலான சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தொடக்க விழா, இளம் தலைமுறையினரை நேரடியாக இலக்காகக் கொண்டு, வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் நோய்களைத் தடுக்கும் வாழ்வியல் சுகாதார உறுதிமொழியை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வின் போது, குழந்தைகள் அனைவரும் 'சுவாஸ்த் சங்கல்ப்' உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். நீண்ட கால நல்வாழ் வுக்கு அடிப்படையான எளிய அதேசமயம் மிக முக்கியமான தினசரி பழக்கவழக் கங்களைக் கடைப்பிடிக்க உறுதிகொண்டு, அவர்கள் அதிகாரப்பூர்வமாக 'சுகா தாரப் போராளிகளாக' களமிறங்கினர். நேரடி மற்றும் டிஜிட்டல் தளங்கள் வாயிலாக ஒன்றிணைந்த மாணவர்கள், ஆரோக்கியமான உணவு முறைகளைக் பின்பற்றுவது, உடல் திறனைப் பேண விளையாடுவதில் ஈடுபடுவது, இரவில் 8 மணி நேரம் தூங்குவது, வெளிப்புற விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் அளித்து திரை நேரத்தைக் குறைப்பது, மன அமைதியைப் பேணுவது மற்றும் புகையிலை, மது போன்ற தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு உறுதியாக "இல்லை" என்று கூறுவது என ஆரோக்கியமான தேர்வுகளைச் செய்வதாகக் கூட்டு உறுதியேற்றனர். அவர்களின் அர்ப்பணிப்பைக் கவுரவிக்கும் வகையில், கலந்துகொண்ட மாணவர் களுக்குத் தனிப்பட்ட சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டு, அவர்கள் ஆரோக்கியத்திற்கான தீவிரத் தூதர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆளுநர் ஆர்.டி.என். சுரேஷ் ஜெயின் வருகை தந்து, தனது மாவட்ட நெறிமுறையான 'டி.எஸ்.ஜே' (டிஎஸ்ஜே தர்மா, சேவா மற்றும் ஜீவன்) தத்துவத்தை இந்த முன்னெடுப்பு முழுமையாகப் பிரதிபலிப்பதாகப் பாராட்டிப் பேசினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பிரசாந்த் குழும மருத்துவமனைகளின் இயக்குநர் டாக்டர் பிரசாந்த் கிருஷ்ணா, அமைதியாகப் பரவி வரும் வளர்சிதை மாற்றக் கோளாறுகளை எதிர்கொள்ள முக்கியமான மருத்துவ-சமூகக் கூட்டுறவு களை உருவாக்குவதன் மருத்துவ அவசியத்தை வலியுறுத்தினார்.



விஜய் சேதுபதி பூரி ஜெகன்நாத் கூட்டணியில் உருவாகும் 'ஸ்லம் டாக்' படத்தின் படப்பிடிப்பு நிறைவு

இயக்குநர் பூரி ஜெகன்நாத் இயக்கத்தில், பன்முகத் திறமை கொண்ட நட்சத்திர நடிகர் 'மக்கள் செல்வன்' விஜய் சேதுபதி முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'ஸ்லம் டாக்: 33 டெம்பிள் ரோடு' (Slum Dog: 33 Temple Road) திரைப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ளது. இப்படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் நடைபெற்றது.

பூரி கனெக்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் பூரி ஜெகன்நாத் மற்றும் சார்மி கவுர் தயாரித்துள்ள இப்படம், ஏற்கெனவே வெளியான விளம்பரங்கள் மற்றும் முன்னோட்டங்கள் மூலம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனித்துவமான கதை சொல்லும் பாணி மற்றும் விறுவிறுப்பான திரைமொழிக்குப் பெயர் பெற்ற இயக்குநர் பூரி ஜெகன்நாத், அனைத்துத் தரப்பு ரசிகர்களையும் கவரும் வகையில் இப்படத்தை உருவாக்கியுள்ளார். இதுவரை வெளியிடப்பட்ட கதாபாத்திர அறிமுகக் காணொளிகள், படத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஆர்வத்தை அதிகரித்துள்ளன.

இப்படத்தை விரைவில் திரையரங்குகளில் வெளியிடப் படக்குழுவினர் திட்டமிட்டுள் ளனர். இதற்காக, படத்தின் விளம்பரப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். படத்தின் வெளியீட்டுத் தேதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக சம்யுக்தா நடித்துள்ளார். இவர்களுடன் தபு, துனியா விஜய், ஜரினா வஹாப், பிரம்ஹாஜீ , வி.டி.வி. கணேஷ் உள்ளிட்ட பலர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஏற்கெனவே வெளியான காணொளிகள், படத்தில் இடம்பெறும் ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் தனித்துவ மான முக்கியத்துவம் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளன.

சாம் கே. நாயுடு ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்திற்கு ஹர்ஷவர்தன் ராமேஸ்வர் இசையமைத்துள்ளார். படத்தொகுப்புப் பணிகளை சந்தோஷ் நூஜில்லா மேற்கொண்டுள்ளார்.

இத்திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் பான் இந்தியத் திரைப்படமாக வெளியாகவுள்ளது.

நடிகை கீர்த்தி சுரேஷ் பிறந்தநாளை முன்னிட்டு வெளியான 'அக்கா' டீசர்!

நெட்ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகியிருக்கும் 'அக்கா' இணையத்தொடர் அக்டோபர் 30 அன்று வெளியாகிறது. நடிகை கீர்த்தி சுரேஷின் பிறந்தநாளை முன்னிட்டு இதன் டீசர் வெளியாகியுள்ளது. இதில் கீர்த்தி சுரேஷ் பவானியாகவும், ராதிகா ஆப்தே ருத்ராவாகவும் அறிமுகமாகின்றனர். பெர்னூரு பாரம்பரியமும் அதைவிட அதிகமாக பகையும் கொண்ட இடம். இங்கு ஆட்சி செய்யும் பெண்கள் யாருக்கும் அடிபணிவதில்லை. மாறிவரும் அதிகாரப் போட்டிகள் மற்றும் கொழுந்துவிட்டெரியும் பகைமைகளால் உருவான பெர்னூரு ராஜ்ஜியத்தின் மையமே இந்த இரண்டு பெண்கள்தான்.

யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகியிருக்கும் 'அக்கா', பெண்களை மையமாகக் கொண்ட பிரம்மாண்டமான கேங்ஸ்டர் கதை. இத்தொடரை எழுதி, இயக்கியிருக்கிறார் அறிமுக இயக்குநர் தர்மராஜ் ஷெட்டி. 1980-களின் பின்னணியில் உருவாகியிருக்கும் 'அக்கா', தலைமுறை தலைமுறையாகப் பெண்களால் கட்டமைக்கப்பட்டு, ஆளப்பட்டு, பாதுகாக்கப்பட்ட பெர்னூரு என்ற கற்பனை உலகத்தை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

தனது பிறந்தநாளை முன்னிட்டு 'அக்கா' தொடரின் டீசர் வெளியானது மற்றும் தொடரின் அனுபவம் குறித்து கீர்த்தி சுரேஷ் பகிர்ந்து கொண்டதாவது, "என்னுடைய பிறந்தநாளன்று 'அக்கா' டீசர் வெளியிட்டிருப்பதுரொம்பவே ஸ்பெஷல். இதுவரை நான் நடித்த கதாபாத்திரங்களிலேயே மறக்க முடியாதது பவானிதான்.

ராதிகாவுடன் இணைந்து பணியாற்றியது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எங்களுடைய கதாபாத்திரங்கள் கதைக்கு சுவாரஸ்யமான பல பரிமாணங்களை



தரும். நெட்ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனங்களுடன் நான் இணைந்து பணியாற்றும் முதல் தொடர் 'அக்கா'. இந்தக் கதையின் தனித்துவமும், அதன் உலகமும்தான் என்னை ஈர்த்தது. நிச்சயம் பார்வையாளர்களுக்கும் இது பிடிக்கும் என நம்புகிறேன்" என்றார்.



நான்கு ஊழியர்களுக்கு உயர் ரக மாடல் கார்களை பரிசாக வழங்கியது, சென்னையைச் சேர்ந்த சிலை நிறுவனம்!

சென்னை, அக், 19: இந்தியாவின் முதல் சிற்பக் கலை சார்ந்த வீட்டு அலங்காரப் பிராண்டாகிய சிலை (SILAII), தனது நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் தொடக்க காலம் முதலே முக்கியப் பங்காற்றி வரும் நான்கு ஊழியர்களுக்கு அண்மையில் (17 அக்.2026), சென்னையில் நடைபெற்ற விழாவில், உயர் ரக மாடல் கார்களைப் பரிசாக வழங்கியது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அந்த ஊழியர்கள் அளித்த பங்களிப்பையும், அர்ப்பணிப்பையும் கொண்டாடும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில், இந்நிறுவனத்தின் தலைமை உற்பத்தி அதிகாரியாகப் பணியாற்றும் ராகுல் கிஷன், சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவரான மிதுன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் தலைவரான நிஷாந்த், உற்பத்திப் பிரிவின் தலைவரான சத்யா ஆகிய நால்வரும் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி, தங்களது பொறுப்புகளுக்கு அப்பாற்பட்டும் பங்களித்து வந்துள்ளனர்.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக, ஒவ்வொரு ஊழியரின் குடும்பத்தினரும் தங்களுக்குப் பிடித்த காரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் மூலம், ஊழியர்களுக்கு மட்டுமின்றி அவர்களது குடும்பத்தினருக்கும் இது ஒரு மறக்க முடியாத தருணமாக அமைந்தது.

இந்த நிகழ்வில் பேசிய சிலை நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும், நிறுவனருமாகிய திரு. அருண் டைட்டன், "நான் ஒவ்வொரு நாளும் காரில் பாதுகாப்பாக வீடு திரும்புகிறேன். என்னுடன் இணைந்து சிலை நிறுவனத்தை உருவாக்கியவர்களும் தங்களது குடும்பத்தினருடன் அதே வசதியையும், பாதுகாப்பையும் பெற வேண்டும் என்று விரும்பினேன்.

நாங்கள் இணைந்து உருவாக்கிய வெற்றியைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவர்களுக்கு எங்களது நன்றியை வெளிப்படுத்துவதற்குமான ஒரு முயற்சிதான் இது. இந்தியாவில் கலைத்திறன் மிக்கவர்கள் ஏராளமாக உள்ளனர். ஆனால், கலைஞர்களும், கைவினைக் கலைஞர்களும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கிக்கொள்ள உதவும் ஒரு சூழல் அமைப்பு தேவை என்று சிலை நம்புகிறது. தற்போது எங்கள் நிறுவனத்தில் 250-க்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர். எங்களது தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களில் ஏறத்தாழ 80 சதவீதம் பேர் பெண்கள். இவர்களில் பலர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலருக்கு எங்களது நிறுவனம் முதல் வேலை வாய்ப்பையும், தங்களது கலைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளது.

கலையை அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றுவதோடு, அதன் பின்னணியில் உழைக்கும் மக்களுக்குப் பொருள் பொதிந்த வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதே எங்களது நோக்கம். இதனை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் வகையில், மேலும் பல இளைஞர்கள் கலையை மதிப்புமிக்க, நிலையான தொழிலாகத் தேர்ந்தெடுக்க உதவும் கலை சார்ந்த கல்லூரியைத் தொடங்கவும் நாங்கள் விரும்புகிறோம்.

சிலை நிறுவனத்துடன் இணைந்து எங்கள் ஊழியர்களும் வளர வேண்டும் என்பதே எங்களது விருப்பம். பணியிடத்தைத் தாண்டி, அவர்களது குடும்பங்களுக்கும் பயனளிக்கும் வாய்ப்புகளை உருவாக்குவதே எங்களது நோக்கம்," என்றார்.

இந்தியா முழுவதும் 20,000 பெண் ஆலோசகர்களைப் பணியமர்த்த உள்ளதாக ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் அறிவிப்பு!

பாண்டிச்சேரி, அக், 19: இந்த நவராத்திரி திருநாளை முன்னிட்டு, நிறுவனத்தின் 'நாரிசக்தி' (Narishakti) திட்டத்தின்கீழ் 2027 நிதி ஆண்டின் இறுதிக்குள் இந்தியா முழுவதும் 20,000 பெண் ஆலோசகர்களைப் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் (ICICI Life Insurance) அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி நிறுவனத்தில் உள்ள 78,000-க்கும் மேற்பட்ட பெண் ஆலோசகர்கள் மூலம் நிறுவனத்தின் முகவர் வழியிலான பிசினஸில் 45% பங்களிப்பு கிடைக்கிறது. இந்த அறிவிப்பானது நிறுவனத்தின் 'நாரிசக்தி' திட்டத்தின் 2-ஆம் ஆண்டு தொடக்க விழாவோடு இணைந்து வெளியாகி உள்ளது.

ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி (Chief Distribution Officer) திரு. அமிஷ் பங்கர் கூறுகையில், "ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸில், 'திறமைக்கு பாலினம் இல்லை' என்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நமது ஆண் காப்பீட்டு ஆலோசகர்களின் செயல்பாடுகளில் தொடர் முன்னேற்றத்தைக் கண்டு வரும் அதே வேளையில், நமது பெண் ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் தேவைகளையும் துல்லியமாகப் புரிந்து கொள்ள எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை.

குறிப்பாக, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, நமது மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கையில் பெண் ஆலோசகர்கள் சுமார் 32% பங்கைக் கொண்டுள்ளனர்; மேலும் அவர்கள் நமது முகவர் வழியிலான பிசினஸில் சுமார் 45% பங்களிப்பை வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, பெங்களூரு, கேரளா மற்றும் மும்பை போன்ற பகுதிகளில், முகவர் வழியிலான பிசினஸில் இந்த எண்ணிக்கை 50%-க்கும் அதிகமான அளவைக் கடந்துள்ளதை நாங்கள் கண்டுள்ளோம்.

Amazon Great Indian Festival 2026: Echo மற்றும் Fire TV சாதனங்களில் 45% வரை தள்ளுபடி பெறுங்கள்



சென்னை, அக், 19: Amazon-இன் Great Indian Festival 2026 இப்போது நேரலையில் உள்ளது, இது Echo smart speakers மற்றும் smart displays, Fire TV streaming sticks, மற்றும் Fire TV built-in கொண்ட smart TV-களில் அற்புதமான சலுகைகளைக் கொண்டு வருகிறது. குரல் கட்டுப்பாடு மூலம் அன்றாட பணிகளை எளிதாக்க நீங்கள் விரும்பினாலும், உங்கள் TV streaming அனுபவத்தை மேம்படுத்த விரும்பினாலும், அல்லது உங்கள் smart home-ஐ தடையின்றி நிர்வகிக்க விரும்பினாலும், அனைவருக்கும் ஏற்ற ஒன்று இதில் காத்திருக்கிறது.

இந்த பண்டிகைக் காலத்தில், ஏதேனும் ஒரு Echo smart speaker, smart display, அல்லது Fire TV Stick வாங்கி, புத்தம் புதிய Alexa+-க்கான இலவச Early Access-ஐப் பெறுங்கள். Alexa+ என்பது Amazon-இன் generative AI மூலம் இயங்கும் தனிநபர் அசிஸ்டென்ட் ஆகும். இது இயல்பாக உரையாடக்கூடியது, மிகவும் புத்திசாலித்தனமானது, உங்களுக்கேற்ப தனிப்பயனாக்கப்பட்டது, அசல் இந்தியத் தன்மை வாய்ந்தது மற்றும் நிஜ உலகில் செயல்களைச் செய்யக்கூடியது.

ஹிமாலயா பேபிகேர்-ன் 'கோல்டன் கிஃப்ட் பேக்' போட்டியின் வெற்றியாளர்கள் அறிவிப்பு

பாண்டிச்சேரி, அக், 19: மருத்துவர்களால் அதிகம் பரிந்துரைக்கப்படும் நம்பர் 1 பிராண்டான ஹிமாலயா பேபிகேர், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடனான விலைமதிப்பற்ற தருணங்களைக் கொண்டாடுவதற்கும், பகிர்ந்துகொள்வதற்கும் அழைப்பு விடுத்த 'கோல்டன் கிஃப்ட் பேக்' போட்டியின் வெற்றியாளர்களை மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. இந்தியாவின் முழுவதும் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும்



மேற்கு ஆகிய நான்கு மண்டலங்களிலிருந்து மொத்தத்தில் 12 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 வெற்றியாளர்கள் தலா ரூ.1 லட்சம் மதிப்புள்ள தங்கத்திற்கான வவுச்சர்கள், 8 வெற்றியாளர்கள் தலா ரூ.10,000 மதிப்பிலான வெள்ளி வவுச்சர்களையும் பரிசாகப் பெறுகின்றனர். இந்த வவுச்சர்களை தனிஷ்க் அல்லது கல்யாண் ஆபரண ஷோரூம்களில் நாணயங்களாக மாற்றிக்கொள்ளலாம்.

மங்களகரமான தொடக்கங்களுக்கான சிறப்பு 'கோல்ட்-எடிஷன்' பரிசுத் தொகுப்பாக 'ஹிமாலயா பேபி கோல்டன் கிஃப்ட் பேக்' அறிமுகப்படுத்தப்பட்டது. 'ஹிமாலயா கோல்டன் மொமெண்ட்ஸ்' திட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பையும் இது வாடிக்கையாளர்களுக்குவழங்கியது.இப்போட்டியில்பங்கேற்க, வாடிக்கையாளர்கள் பேக்கிற்குள் உள்ள துண்டுப் பிரசுரத்தைச் சுரண்டி தனித்துவமான குறியீட்டைக் கண்டறிய வேண்டும்; QR குறியீட்டை ஸ்கேன் செய்து, தங்கள் குழந்தையுடனான சிறப்பான நினைவுகளைப் பற்றிய குறிப்பை பதிவேற்ற வேண்டும். இத்திட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் ரூ.500 மதிப்பிலான 'மை பேபி அண்ட் மீ' (My Baby & Me) மின்-புத்தகம் உத்தரவாதப் பரிசாக வழங்கப்பட்டது. குழந்தைகளுடனான சிறப்பு வாய்ந்த நினைவுகளைக் கொண்டாடும் இந்த எளிய டிஜிட்டல் முறையிலான முன்னெடுப்பு, பெற்றோர்களையும், குடும்பத்தினரையும் ஒன்றிணைத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களில், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு தங்கப் பரிசு வென்றவர்களும், எட்டு வெள்ளிப் பரிசு வென்றவர்களும் அடங்குவர். வினோதினி லியோ, சுஸ்ரீ சங்கீதா பெஹரா, ஜெயந்தி தேவி, டேவிட் ராஜ் தேவரகொண்டா மற்றும் சர்பராஸ் அகமது ஆகிய 5 வெற்றியாளர்கள் இந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து, ஹிமாலயா வெல்னஸ் நிறுவனத்தின் பேபிகேர் பிரிவு இயக்குநர் திரு. சக்ரவர்த்தி N. V. கூறுகையில், "குழந்தைகளின் தாய் தந்தையராக இருப்பது என்ற நிலையை சிறப்பானதாக ஆக்கும் தினசரி தருணங்களை நாங்கள் கொண்டாடி மகிழ ஒரு வாய்ப்பை இந்த 'கோல்டன் கிஃப்ட் பேக்' போட்டி வழங்கியது. இந்த முன்னெடுப்பின் மூலம் பல குடும்பங்களுடன் இணைந்து, தங்கள் குழந்தைகளுடனான அற்புதமான நினைவுகளைப் பகிர்ந்துகொண்ட வெற்றியாளர்களை அங்கீகரித்து, கௌரவிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ஹிமாலயா பேபிகேர்-ல், இத்தகைய அர்த்தமுள்ள பந்தங்களை நாங்கள் மதிக்கிறோம்; மேலும் வாடிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு எங்களை இன்னும் நெருக்கமாக்கும் இது போன்ற அனுபவங்களை நாங்கள் தொடர்ந்து உருவாக்குவோம்," என்று தெரிவித்தார்.

பொது அறிவிப்பு

பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரரான திரு. முகமது ஷாகுல் ஹமீது, த/பெ. ஷேக் தாவூத், எண்.18/19, சுப்ரமணியம் நகர், 3-வது தெரு, F1, முதல் தளம், புத்தகரம், சென்னை 600099 என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

எனது கட்சிக்காரர் 27.09.2026 அன்று திருவொற்றியூர், எல்லையம்மன் கோவிலில் தனது நண்பரைச் சந்திக்கச் சென்றபோது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தொடர்பான ஆவணங்களைத் தவறவிட்டுவிட்டார். அந்த ஆவணங்களின் விவரங்கள் பின்வருமாறு:

தவறவிட்ட ஆவணங்களின் விவரங்கள்:

கட்டுமான ஒப்பந்த ஆவணம் (Agreement of Construction), ஆவண எண். 8007/2019, நாள்: 07.06.2019.

கிரயப் பத்திரம் (Sale Deed), ஆவண எண். 8008/18, நாள்: 07.06.2019.

பொது அதிகாரப் பத்திரம் (Power of Attorney), ஆவண எண். 11819/2022, நாள்: 24.08.2022.

முதல் சாதாரண அடமானப் பத்திரம் (Deed of First Simple Mortgage), ஆவண எண். 16936/2022, நாள்: 02.12.2022.

மேற்கண்ட அனைத்து ஆவணங்களும் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவை.

சொத்தின் விவரம்

சென்னை 600099, புத்தகரம், சுப்ரமணிய நகர், 3-வது தெருவில் அமைந்துள்ள 'ஸ்ரீனிவாசம்' (SRINIVASAM) எனும் கட்டிடத்தில், தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் அமைந்துள்ள F1 என்ற குடியிருப்பு டுப்ளெக்ஸ் வீடு. பொதுப் பயன்பாட்டுப் பகுதியையும் சேர்த்து மொத்தம் 1,800 சதுர அடி பரப்பளவு கொண்டது. மேலும், இரண்டு மூடப்பட்ட கார் நிறுத்துமிடங்களுடன், மொத்தம் 1,921 சதுர அடி நிலப்பரப்பில் அமைந்துள்ள பிளாட் எண்.18 மற்றும் பிளாட் எண்.19-ன் கிழக்குப் பகுதி ஆகியவற்றில், 961 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பங்கு (UDS) உடன் கூடிய சொத்தாகும்.

இச்சொத்து புத்தகரம் கிராமம், மாதவரம் வட்டம், சென்னை மாவட்டத்தில், சர்வே எண்.79/8, புதிய பட்டா எண்.9125, பட்டாவின்படி புதிய உட்பிரிவு சர்வே எண்.79/26-ல் அமைந்துள்ளது.

இச்சொத்து சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

சொத்தின் அளவுகள்:

வடக்கு: 34 அடி

தெற்கு: 34 அடி

கிழக்கு: 55 அடி 6 அங்குலம்

மேற்கு: 57 அடி 6 அங்குலம்

சொத்தின் எல்லைகள்:

வடக்கில்: 20 அடி அகல சாலை.

கிழக்கில்: காலிநிலம் (தற்போது 20 அடி அகல சாலையாக உள்ளது).

தெற்கில்: சர்வே எண்.79/13-ல் உள்ள மனைகள்.

மேற்கில்: ஜே. சங்கர் என்பவருக்குச் சொந்தமான பிளாட் எண்.19-ன் மேற்குப் பகுதி.

மேற்கண்ட ஆவணங்கள் யாருக்கேனும் கிடைத்தால், கீழ்க்கண்டதொலைபேசிஎண்ணிலோஅல்லதுமுகவரியிலோ தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கே. மோசஸ் (K. MOSES)
வழக்கறிஞர் (Advocate),
எண்.94, நெடுஞ்செழியன் 5-வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை 600078.
தொலைபேசி எண்: 7010708638



'இது நம்ம வைப்ஸ்' என்ற புதிய அடையாளத்துடன் அறிமுகப்படுத்திய சோனி விழா!

சென்னை, அக், 19: தமிழ் ரசிகர்களுக்கு உலகத் தரத்திலான பொழுதுபோக்கு அனுபவங்களை வழங்கும் வகையில், புதிய நிகழ்ச்சிகள், தொடர்கள், திரைப்படங்கள் மற்றும் விளையாட்டு ஒளிபரப்புகள் எனப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தனது புதிய நிகழ்ச்சித் தொகுப்பை சோனி விழா (Sony VIZHA) அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழர்களின் கலாச்சார வேர்களுடன் இணைந்த கதைகளையும், நவீன பொழுதுபோக்கு அம்சங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் தொகுப்பு அமைந்துள்ளது. உலகளவில் வெற்றிபெற்ற நிகழ்ச்சி வடிவங்களின் தமிழ் வடிவங்கள், ரசிகர்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகள் மற்றும் புதிய முயற்சிகள் எனப் பலதரப்பட்ட அம்சங்கள் இதில் இடம்பெறுகின்றன. உலகெங்கிலும் உள்ள தமிழ் ரசிகர்களின் மாறிவரும் ரசனைக்கு ஏற்ற வகையில், அவர்களின் கலாச்சார அடையாளத்துடனான தொடர்பையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அறிமுகத்தின் முக்கிய அம்சங்களாக, உலகளவில் புகழ்பெற்ற இரண்டு நிகழ்ச்சிகளின் தமிழ் வடிவங்களான 'தமிழ் ஐடல்' (Tamil Idol) மற்றும் 'செலிபிரிட்டி மாஸ்டர் செஃப் தமிழ்' (Celebrity Master-Chef Tamil) ஆகியவை இடம்பெறுகின்றன. இசை மற்றும் சமையல் போட்டிகளை மையமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சிகள், 'பாட்டு, சமையல்' என்ற பொழுதுபோக்கு அம்சங்களை முன்னிலைப்படுத்துகின்றன.

மேலும், 90-களின் காதல் நினைவுகளை மீட்டெடுக்கும் 'நோட்புக் 90'ஸ் காதல் ஃப்ளாஷ்பேக்', உண்மையான குற்றச் சம்பவங்களின் பின்னணியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'கிரைம் பேட்ரோல் குற்றங்கள் தரும் எச்சரிக்கை', பெண் காவலர்களின் துணிச்சலையும் அர்ப்பணிப்பையும் எடுத்துரைக்கும் 'மேடம் போலீஸ் நாங்க இருக்க பயமேன்' ஆகிய நிகழ்ச்சிகளும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

திரைப்பட ரசிகர்களுக்காக 'அன்பில் அவன்', 'அசரீரி', 'சர்தார் 2', 'மண்டாடி', 'ராஜன் வகையறா', 'மீசைய முறுக்கு 2' உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களையும் சோனி விழா வழங்கவுள்ளது.

விளையாட்டுத் துறையிலும் தனது பங்களிப்பை விரிவுபடுத்தும் வகையில், இந்தியா நியூசிலாந்து அணிகள் இடையிலான அடுத்ததாக நடைபெறவுள்ள இருதரப்பு டி20 சர்வதேசத் தொடரின் ஐந்து போட்டிகளுக்கும் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ஆர். அஸ்வினின் தமிழ் வர்ணனையை சோனி விழா வழங்கவுள்ளது. இதன் மூலம் கிரிக்கெட் ரசிகர்கள் தங்களுக்குப் பிடித்த விளையாட்டைத் தாய்மொழியில் ரசிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

சோனி விழாவின் இந்தப் புதிய முயற்சியின் மையமாக, 'இது நம்ம வைப்ஸ்' (Ithu Namma Vibe) என்ற பிராண்ட் அடையாளம் அமைந்துள்ளது. தமிழ் கலாச்சாரம், மக்கள் மற்றும் கதைகளைக் கொண்டாடும் இந்த அடையாளம், ரசிகர்களுக்கு நெருக்கமான அதே நேரத்தில் புதுமையான பொழுதுபோக்கு அனுபவங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலகளவில் வெற்றிபெற்ற நிகழ்ச்சி வடிவங்களையும், தமிழ் ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ற கதைகள் மற்றும் அனுபவங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம், தலைமுறைகளைக் கடந்து அனைத்து வயதினரையும் இணைக்கும் பொழுதுபோக்கு தளமாக உருவெடுக்க சோனி விழா திட்டமிட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் தளங்களில் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஒரே உலகமாக வழங்குவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

கோவை துடியலூரில் வீட்டில் கஞ்சா செடிகள் வளர்ப்பு; 5 செடிகளை பறிமுதல் செய்த போலீசார்



கோவை மாவட்டம், துடியலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நஞ்சை கவுண்டன்புதூர் பகுதியில் வீட்டின் அருகே உள்ள காலி நிலத்தில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படுவதாகக் கிடைத்த தகவலின் பேரில், போலீசார் சோதனை மேற்கொண்டு 5 கஞ்சா செடிகளைப் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக, நஞ்சை கவுண்டன்புதூர், பரமசிவன் கோவில் தெருவைச் சேர்ந்த தினேஷ் சந்த் ஜெய்ஸ்வாலின் மகன் ஆஷிஷ் ஜஸ்வான் (24) என்ற ஆயுஷ் என்பவரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

காந்திபுரத்தில் உள்ள பேரிங் விற்பனைக் கடையில் பணிபுரிந்து வரும் இவர், தனது தாயுடன் வசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இவரது உறவினருக்குச் சொந்தமான சுமார் 5 சென்ட் காலி நிலத்தில் உள்ள பழைய வீட்டின் பகுதியில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதையடுத்து, துடியலூர் காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று சோதனை நடத்தி, 5 கஞ்சா செடிகளைப் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினர்.

PUBLIC NOTICE

This is to inform the general public that my clients, Mrs. Sharmila W/o Yuvaraj, residing at B-101, Casa Grand North, GNT Road, Madhavaram, Chennai 600060, and the other legal heirs of S. Renuka, have lost the original documents in their possession, namely, the Sale Deed. No. 199 of 1998, dated 02.03.1998, executed between one Mr. V. Vasudhevan S/o Veerasamy Naidu and V. Balakrishnan S/o Veerasamy Naidu, and another to S. Renuka W/o K. Selvaraj, registered before the Nellikuppam sub-registrar, pertaining to property comprising Survey Numbers 258, 259/2, 259/3, 261, 260/3, and 256/2, totaling 7.30 acres, situated under the jurisdiction of the Nellikuppam sub-registrar, Krishnapuram village, Villupuram district, Tamil Nadu and including the parent documents (i.e. Doc. No. 960 of 1991 & 961 of 1991). My clients state that after the death of my mother, Ms. S. Renuka, the documents could not be traced despite a prudent and sincere search. Anyone in possession of the above original document who claims any right or interest in the said property shall inform the same to the Advocate mentioned below in writing within 15 days hereof. If no claim is received within 15 days, it will be treated that the said documents are permanently lost and that no one has any adverse claims over the said documents or the said property.

A. ALLEN SAVIO
ADVOCATE,
9092658040
No. 278, 18th Street, Union Carbide Colony,
Kodungaiyur, Chennai, 600118
advallensavio@gmail.com

HON'BLE CHIEF SMALL CAUSES JUDGE AT CHENNAI
BEFORE THE MOTOR ACCIDENTS CLAIMS TRIBUNAL
M.P. No. 2 of 2026
in
M.C.O.P No. 992 of 2026

IFFCO Tokio General Insurance Co. Ltd.,
.. Petitioner /2nd Respondent
Vs

1. Sheela
.. 1st Respondent / 1st Petitioner
2. Nayanika (Minor)
.. 2nd Respondent / 2nd Petitioner
3. Jayanthi
.. 3rd Respondent / 3rd Petitioner
4.Bhuvaneswari R
.. 4th Respondent / 1st Respondent

Notice is hereby given that the Motor Accident Claims Tribunal, Chief Small Causes Court, Chennai, has ordered notice in M.P. No. 2 of 2026 in MCOP No. 992 of 2026. The Petitioner/2nd Respondent, IFFCO Tokio General Insurance Company Limited, has filed a petition to set aside the ex parte Order passed on 29/04/2026 setting the Petitioner/2nd Respondent ex parte. You are required to appear in person or through counsel before the Tribunal on 27/10/2026, failing which the matter will be decided in your absence.

N. Anbumurugan
Counsel for Petitioner/2nd Respondent



சென்னையில் ரிலையன்ஸ் அனிமேஷன் அகாடமியின் முதல் மையத்தை திரு. விகாஸ் சுரானா மற்றும் திரு. அமீர் ஷாஹின்ஷா திறந்து வைத்தனர்

சென்னை, அக், 19: ரிலையன்ஸ் அனிமேஷன் அகாடமி, தமிழகத்தில் தனது முதல் பயிற்சி மையத்தைச் சென்னையில் உள்ள வேளச்சேரியில் தொடங்கியுள்ளது

அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ் (VFX), கேமிங் மற்றும் திரைப்படத் தயாரிப்பு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத் துறைகளில் மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் நோக்கில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது

இதன் தொடக்க விழாவில், சிறப்பு விருந்தினர்களாக செங்கல்பட்டு வித்யா சாகர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகி விகாஸ் சுரானா, சென்னையின் பசிலிக் ஃப்ளை ஸ்டுடியோ, தலைவர் திரு.அமிர் ஷாஹின்ஷா மற்றும் கௌரவ விருந்தினர்களாக திரு. சந்தீப்ஷெட்டிவணிகத்தலைவர்,ரிலையன்ஸ் அனிமேஷன் அகாடமி,திரு.கௌஸ்துப் பதக் நிர்வாக இயக்க மேலாளர், ரிலையன்ஸ் அனிமேஷன் அகாடமி, கார்த்திக் ஜி சுற்றுலா அமைச்சகத்தின் தலைவர், திரு.பரத்சிம்மன் ஆலோசனைக் குழு உறுப்பினர் மத்திய திரைப்படத் தணிக்கை வாரியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த மையத்தின் மூலம், வேகமாக வளர்ந்து வரும் அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் (AVGC) துறைக்குத் தேவையான திறமையான இளைஞர்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்துடன் கூடிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நவீன வடிவமைப்பு, விர்ச்சுவல் புரொடக்ஷன் மற்றும் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கதை உருவாக்குதல் உள்ளிட்ட தொழில்நுட்பங்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்

தொழில்துறை நிபுணர்களின் வழிகாட்டுதல், நடைமுறைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி, நவீன வசதிகள் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான உதவிகள் ஆகியவை இந்த அகாடமியின் சிறப்பம்சங்களாகும்

மேலும், சான்றிதழ் படிப்புகள், மேம்பட்ட பயிற்சிப் படிப்புகள் மற்றும் பட்டப்படிப்புகள் வழங்கப்பட உள்ளன. அனிமேஷன் மற்றும் டிஜிட்டல் ஊடகத் துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்முறைப் பணியாளர்கள் இந்தப் பயிற்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

இது குறித்து, ரிலையன்ஸ் அனிமேஷன் அகாடமி வேளச்சேரி மையத்தின் இயக்குநர் உபேந்திரா ஆர். நைதானி கூறுகையில்:-

இளம் தலைமுறையினரின் கற்பனைத் திறனைப் புதுமையான தொழில்நுட்பமாக மாற்றுவதற்கும், உலகளாவிய படைப்பாற்றல் துறையில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் இந்த அகாடமி ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என்றார்.

45% பிசினஸ் பங்களிப்பு அளிக்கும் பெண் ஆலோசகர்கள்: ஐசிஐசிஐ லைஃப் பெருமித அறிவிப்பு!

கோவை, அக், 19: இந்த நவராத்திரி திருநாளை முன்னிட்டு, நிறுவனத்தின் 'நாரிசக்தி' (Narishakti) திட்டத்தின்கீழ் 2027 நிதி ஆண்டின் இறுதிக்குள் இந்தியா முழுவதும் 20,000 பெண் ஆலோசகர்களைப் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் (ICICI Life Insurance) அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி நிறுவனத்தில் உள்ள 78,000-க்கும் மேற்பட்ட பெண் ஆலோசகர்கள் மூலம் நிறுவனத்தின் முகவர் வழியிலான பிசினஸில் 45% பங்களிப்பு கிடைக்கிறது. இந்த அறிவிப்பானது நிறுவனத்தின் 'நாரிசக்தி' திட்டத்தின் 2-ஆம் ஆண்டு தொடக்க விழாவோடு இணைந்து வெளியாகி உள்ளது.

ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி (Chief Distribution Officer) திரு. அமிஷ் பங்கர் கூறுகையில், "ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸில், 'திறமைக்கு பாலினம் இல்லை' என்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நமது ஆண் காப்பீட்டு ஆலோசகர்களின் செயல்பாடுகளில் தொடர் முன்னேற்றத்தைக் கண்டு வரும் அதே வேளையில், நமது பெண் ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் தேவைகளையும் துல்லியமாகப் புரிந்து கொள்ள எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை. குறிப்பாக, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, நமது மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கையில் பெண் ஆலோசகர்கள் சுமார் 32% பங்கைக் கொண்டுள்ளனர்; மேலும் அவர்கள் நமது முகவர் வழியிலான பிசினஸில் சுமார் 45% பங்களிப்பை வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, பெங்களூரு, கேரளா மற்றும் மும்பை போன்ற பகுதிகளில், முகவர் வழியிலான பிசினஸில் இந்த எண்ணிக்கை 50%-க்கும் அதிகமான அளவைக் கடந்துள்ளதை நாங்கள் கண்டுள்ளோம். இயல்பான இரக்க குணமும் உத்திசார் சிக்கல் தீர்க்கும் திறனும் கொண்ட இந்தியப் பெண்களுக்கு, இயல்பாகவே அமைந்த சில தனித்துவமான பண்புகள் உள்ளன. இது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளவும், சிறந்த தீர்வுகளை வழங்கவும், விற்பனைக்குப் பிறகும் நீண்டகால உறவுகளைப் பேணவும் அவர்களுக்கு உதவுகிறது. வலுவான உணர்ச்சிப் பிணைப்பு (Emotional quotient), சமூகத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் இயல்பு, அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் குடும்பங்களைப் பாதுகாப்பதில் உள்ள நம்பிக்கை ஆகிய இந்த குணங்கள் காப்பீட்டுத் துறைக்கு மிகவும் முக்கியமானவை.



மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் கட்டிடம் திறப்பு

நெல்லை மாவட்டம் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் அலுவலக பணிகளுக்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த கட்டிடத்தை புணரமைப்பு செய்து அலுவலகப் பணிக்காக திறந்து வைக்கப்பட்டது. பேரூராட்சி மன்ற தலைவர் கு.பார்வதி மோகன், பேரூராட்சி இளநிலை பொறியாளர் ந.விஜயகுமார், ஆகியோர் திறந்து வைத்தார்கள். அதே போல் குடிநீர் வினியோகம் செய்யப் படுவதற்காக வாங்கப்படுகின்ற பைக் மோட்டார் சாதனங்கள் மற்றும் அதை சார்ந்த தளவாடபொருட்கள் வைப்பதற்கு போதுமான இடவசதி இல்லாமல் இருந்தது. எனவே அதனை பாதுகாப்பாகவும் இலகு வாக பராமரிப்பதற்கும் பேரூராட்சி வளாகத் தில் புதிதாக செட் அமைத்து அதை திறக்கும் நிகழ்வும் நடைபெற்றது. பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கொம்பையா, முத்துக்குமார், சண்முகராஜ் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். மேலும் அதே பகுதியில் தூய்மை பணியாளர்களுக்கான தளவாட சாமான்கள் ப்ளீச்சிங் பவுடர் போன்றவை வைப்பதற்கும் தனியாக ஒரு அறை அமைக்கப்பட்டுள்ளது அதனை பேரூராட்சி மன்ற சுகாதார அலுவலர் செந்தில் வேலாயுதம், சுகாதாரப் பணி மேற்பார்வையாளர் கலையரசி ஆகியோர் திறந்து வைத்தனர்.

நாமக்கல்லில் புதிய கிளையுடன்

தமிழ்நாட்டில் தனது சேவையை விரிவுபடுத்துகிறது ஆதித்யா பிர்லா ஹவுசிங் பைனான்ஸ்

நாமக்கல், அக், 19: ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட்டின் துணை நிறுவனமும், நாட்டின் முன்னணி வீட்டு வசதி நிதி நிறுவனமுமான ஆதித்யா பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ("ABHFL"), தனது அகில இந்திய விநியோகக் கட்டமைப்பை விரிவுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, நாமக்கல்லில் புதிய கிளையைத் தொடங்கி தமிழ்நாட்டில் தனதுசேவையைவிரிவுபடுத்தியுள்ளது. இந்தபுதியகிளையின் திறப்பு மூலம், தமிழ்நாட்டில் ஏபிஎச்எஃப்எல்-ன் மொத்த கிளைகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் வேகமாக வளர்ந்துவரும் சந்தைகளில் தனது இருப்பை வலுப்படுத்துவதோடு, வாடிக்கையாளர்கள் நிறுவனத்தின் சேவைகளை எளிதில் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்பளம் பெறும் தனிநபர்கள், சுயதொழில் செய்யும் தொழில்முறையாளர்கள், பிற சுயதொழில் செய்பவர்கள் மற்றும் வளர்ந்து வரும் வருவாய் பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ஏற்ப எளிய முறை வீடுகள், முதன்மை வீடுகள், கட்டுமான நிதி மற்றும் சொத்தின் மீதான கடன்கள் போன்ற பலவிதமான வீட்டு வசதி நிதி தீர்வுகளை ஏபிஎச்எஃப்எல் வழங்குகிறது. வலுவான டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் விரைவான கடன் அனுமதி மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த அனுபவத்தை ஏபிஎச்எஃப்எல் வழங்குகிறது. இக்கிளைத் தொடக்க விழாவை முன்னிட்டு, அக்டோபர் 13 முதல் நவம்பர் 30, 2026 வரை பூஜ்ஜியம் லாகின் கட்டணம் மற்றும் ₹50 லட்சம் வரை உடனடி கடன் அனுமதி ஆஃபரை ஏபிஎச்எஃப்எல் வழங்குகிறது. இதன் மூலம் புதிய கிளைக்கு வரும் வாடிக்கையாளர்கள் விரைவாகவும் குறைந்த செலவிலும் கடன்களைப் பெற முடியும்.

இந்த விரிவாக்கம் குறித்து ஆதித்யா பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் மேலாண்மை இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு. பங்கஜ் கட்கில் பேசுகையில், "தமிழ்நாடு எங்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு வளர்ச்சிச் சந்தையாகும். வலுவான தேவை மற்றும் உயர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் விருப்பங்களைக் கருத்தில் கொண்டு, சேவைத் தொடர்பை ஆழப்படுத்த பிராந்திய அளவில் எங்களது இருப்பை விரிவுபடுத்தி வருகிறோம்." என்று கூறினார்.

ரூ.409 கோடி முன்னுரிமை ஒதுக்கீடு மூலம் மூலதன உட்செலுத்தலுக்கு வாரியம் ஒப்புதல்!

சேலம், அக், 19: உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் [BSE: 542904; NSE: UJJIVANSFB] செப்டம்பர் 2026-டன் முடிவடைந்த காலாண்டிற்கான தனது நிதிச் செயல்பாடுகளை அறிவித்துள்ளது.

உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் முழு நேர இயக்குநரும், இடைக்காலதலைமைச்செயல் அதிகாரியுமான (Interim CEO) திருமதி கரோல் ஃபர்டாடோ (Ms. Carol Furtado) கூறியதாவது: "வளர்ச்சி வேகத்தைத் தொடர, சர்வதேச நிதிக் கழகம் (International Finance Corporation), பஜாஜ் லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் (Bajaj Life Insurance Ltd.), ஹெச்டிஎஃப்சி லைஃப் இன்சூரன்ஸ் (HDFC Life Insurance) மற்றும் ஆதித்யா பிர்லா சன் லைஃப் இன்சூரன்ஸ் (Aditya Birla Sun Life Insurance) ஆகியவளிடமிருந்து ரூ. 409 கோடி முன்னுரிமைப் பங்கு ஒதுக்கீடு (Preferential Issue) மூலம் நிதி திரட்ட வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது; இது பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது. தற்போதைய புத்தக மதிப்புப் பங்கின் (BVPS) பிரீமியம் விலையில் இந்த நிதி திரட்டப்படுவதால், செப்டம்பர் '26 நிலவரப்படி ஒரு பங்குக்கு தோராயமாக ரூ. 0.8 லாபம் சேரும். கூடுதலாக, அக்டோபர் மாதத்தில் பத்திரமயமாக்கல் தொகுப்பை (securitization pool) ரூ. 500 கோடி அதிகரித்து, வங்கி தனது நிதி கலவையை மேம்படுத்தியுள்ளது. சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் திரு. சஞ்சீவ் நௌடியாள் (Mr. Sanjeev Nautiyal) முன்கூட்டியே ஓய்வுபெற விடுத்த கோரிக்கையை ஏற்று, ஒழுங்குமுறை ஆணையத்திற்கு புதிய நிர்வாக இயக்குநர் (MD) வேட்பாளரை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்ய நியமன மற்றும் ஊதியக் குழு (NRC) தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.



'நாரிசக்தி' திட்டத்தின்கீழ் 20,000 பெண்களை சேர்க்கும் ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ்!

மதுரை, அக், 19: இந்த நவராத்திரி திருநாளை முன்னிட்டு, நிறுவனத்தின் 'நாரிசக்தி' (Narishakti) திட்டத்தின்கீழ் 2027 நிதி ஆண்டின் இறுதிக்குள் இந்தியா முழுவதும் 20,000 பெண் ஆலோசகர்களைப் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் (ICICI Life Insurance) அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி நிறுவனத்தில் உள்ள 78,000-க்கும் மேற்பட்ட பெண் ஆலோசகர்கள் மூலம் நிறுவனத்தின் முகவர் வழியிலான பிசினஸில் 45% பங்களிப்பு கிடைக்கிறது. இந்த அறிவிப்பானது நிறுவனத்தின் 'நாரிசக்தி' திட்டத்தின் 2-ஆம் ஆண்டு தொடக்க விழாவோடு இணைந்து வெளியாகி உள்ளது.

ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை விநியோக அதிகாரி (Chief Distribution Officer) திரு. அமிஷ் பங்கர் கூறுகையில், "ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸில், 'திறமைக்கு பாலினம் இல்லை' என்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நமது ஆண் காப்பீட்டு ஆலோசகர்களின் செயல்பாடுகளில் தொடர் முன்னேற்றத்தைக் கண்டு வரும் அதே வேளையில், நமது பெண் ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் தேவைகளையும் துல்லியமாகப் புரிந்து கொள்ள எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை. குறிப்பாக, செப்டம்பர் 30, 2026 நிலவரப்படி, நமது மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கையில் பெண் ஆலோசகர்கள் சுமார் 32% பங்கைக் கொண்டுள்ளனர்; மேலும் அவர்கள் நமது முகவர் வழியிலான பிசினஸில் சுமார் 45% பங்களிப்பை வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, பெங்களூரு, கேரளா மற்றும் மும்பை போன்ற பகுதிகளில், முகவர் வழியிலான பிசினஸில் இந்த எண்ணிக்கை 50%-க்கும் அதிகமான அளவைக் கடந்துள்ளதை நாங்கள் கண்டுள்ளோம்.



மதுரை மேல மாசி வீதி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் வைர நகைகளின் கலைநயமிக்க கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்

மதுரை, அக், 19, கலைநயமிக்க வைர நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மதுரை மேல மாசி வீதி ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன. இந்த கண்காட்சியை திரு.சிவக்குமார் குடும்பத்தினர், திரு.ராஜா குடும்பத்தினர், ஆகியோர் துவக்கி வைத்தனர். இவர்களுடன் திரு.சிகாபுதீன், (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மதுரை மேல மாசி வீதி கிளை தலைவர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உள்ளனர்.

கலைநயமிக்க இந்த கண்காட்சி அக்டோபர் 17-2026. முதல் அக்டோபர் 25-2026. வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும் .அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான 'மைன்' பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட 'எரா' மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான 'பிரீசியா' நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான 'எத்தினிக்' நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான 'டிவைன்' குழந்தைகளுக்கான நகை தொகுப்பான 'ஸ்டார்லெட்' ஆகியவை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 14 நாடுகளில் 454-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர், செங்கல்பட்டு, கடலூர், ஒசூர், கள்ளக்குறிச்சி, தேனி, ஆகிய நகரங்களில் 37 கிளைகளை கொண்டுள்ளது.

கம்பள விற்பனையில் கிடைக்கும் லாபத்தில் கிராமப்புற சிறுமிகள் சைக்கிள் வாங்க நிதி உதவி

ஜெய்ப்பூர் ரக்ஸ் நிர்வாக இயக்குனர் யோகேஷ் சவுத்ரி தகவல்

கோவை, அக், 19: கையால் செய்யப்பட்ட கம்பளங்கள் மற்றும் தரைவிரிப்புகளில் இந்தியாவின் முன்னணி பெயரான ஜெய்ப்பூர் ரக்ஸ், 2026-ம் ஆண்டிற்கான தங்களது ஆண்டு விற்பனையை அறிவித்துள்ளது. இதில் கைவினைத்திறன், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் என சுமார் 10,000 கம்பளங்கள் பல்வேறு விலைகளில் 60 சதவீதம் வரை தள்ளுபடியுடன் கிடைக்கின்றன.

ஆனால் இந்த ஆண்டு, ஜெய்ப்பூர் ரக்ஸ் விற்பனையின் ஒரு பகுதியாக, விற்பனையின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் பள்ளிக்கு வெகுதூரம் நடந்து செல்லும் கிராமப்புற சிறுமிகள் சைக்கிள் வாங்க வழங்கப்படும் என்று ஜெய்ப்பூர் ரக்ஸ் நிர்வாக இயக்குனர் யோகேஷ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பல கிராமப்புற பகுதிகளில், வீடுகளுக்கும் பள்ளிக்கும் இடையிலான தூரமே ஒருவருக்கு கல்வி கிடைக்குமா என்பதை தீர்மானிக்கிறது. இந்த சிறுமிகளுக்கு, சைக்கிள் என்பது வெறும் போக்குவரத்து சாதனம் மட்டுமல்ல. இது நேரத்தை மிச்சப்படுத்துதல், தூரத்தை கடத்தல், பாதுகாப்பை பெறுதல் மற்றும் தொடர்ந்து பள்ளியில் படிப்பதற்கான ஒரு வாய்ப்பாகும்.



இது குறித்து ஜெய்ப்பூர் ரக்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் யோகேஷ் சவுத்ரி கூறுகையில், "மிகவும் எளிமையான ஒன்றின் மூலம் பல நேரங்களில் பெரிய மாற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. நமது நகரங்களில் நாம் பல வசதிகளுடன் வாழ்கிறோம், அதைப்பற்றி நாம் பெரியதாக சிந்திப்பதில்லை. ஆனால் கிராமப்புற இந்தியாவை உற்று நோக்கினால், சைக்கிள் போன்ற ஒரு அடிப்படை வசதி இல்லாதது கல்விக்கு மிகப்பெரிய தடையாக இருப்பதை காண முடிகிறது. ஒரு சிறுமிக்கான அந்த தடையை ஒரு சிறிய அளவிலாவது நம்மால் நீக்க உதவ முடிந்தால், நாம் வாங்கும் ஒரு கம்பளம் ஒரு பெரிய பயணத்தின் பகுதியாக மாறும். நாம் வாழும் இடங்களுக்கு மட்டுமல்ல, அவற்றுடன் தொடர்புடைய மக்களின் வாழ்க்கையிலும் மதிப்பை உருவாக்கும் இத்தகைய வணிகத்தையே நாங்கள் நம்புகிறோம்," என்று தெரிவித்தார்.



இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே. பிரபு, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தலைமையில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்), டி.இளங்கோவன் (மானாமதுரை), மாவட்ட வருவாய் அலுவலர் ப.சைலேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

பழைய கட்டடங்களில் வசிப்பவர்களை மழைக்காலம் முடியும் வரை பாதுகாப்பான மாற்று இடங்களில் தங்க வைக்கவும் ஏற்பாடுகள்

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா



சென்னை, அக்19: சென்னை பாரிமுனை பகுதியில், 8 மணி நேரத்தில் 35 செ.மீ. மழை பதிவாகியுள்ளதால், மழை முடியும் வரை பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியின் ரிப்பன் மாளிகையில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு வருகை தந்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, சென்னையில் பெய்துவரும் கனமழை மற்றும் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். முன்னதாக, தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை எழிலகத்தில் உள்ள மாநிலக் கட்டுப்பாட்டு அறையில் மழை பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், பின்னர் பாரிமுனை பகுதியில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களையும் பார்வையிட்டார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா,"வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு கடந்த இரண்டு மாதங்களாக நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது மணலி, எண்ணூர், பாரிமுனை உள்ளிட்ட பகுதிகளில் அதிகனமழை பதிவாகியுள்ளது. மழை பாதிப்புகளைக் கண்காணிக்க கட்டுப்பாட்டு அறை தயார் நிலையில் உள்ளது. பொதுமக்கள் தங்களது புகார்களை 1913 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்குவதற்காக 6 முகாம்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மழை பாதிப்புகள் குறித்து முதலமைச்சர் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒருமுறை கேட்டறிந்து வருகிறார். சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது சாதாரண மழை அல்ல. எட்டு மணி நேரத்தில் 35 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இருப்பினும் பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம். மழை முடியும் வரை தேவையின்றி வெளியே வருவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், பழைய கட்டடங்கள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழைய கட்டடங்களில் வசிப்பவர்களை மழைக்காலம் முடியும் வரை பாதுகாப்பான மாற்று இடங்களில் தங்க வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

பள்ளிகளுக்கு விடுமுறையா?

அமைச்சர் ராஜ்மோகன் தகவல்

சென்னை, அக்19: சென்னையில் பெரும்பாலான பகுதிகளில் தண்ணீர் வெளியேறிவிட்டதாக அமைச்சர் ராஜ்மோகன் கூறியுள்ளார்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு மீட்பு பணிகளை அமைச்சர் ராஜ்மோகன் துரிதப்படுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராஜ்மோகன், "முக்கிய இடங்களில் சிசிடிவி மூலம் கண்காணிக்கப்படுகிறது. சென்னையில் பெரும்பாலான பகுதிகளில் தண்ணீர் வடிந்துவிட்டது. வானிலை மைய தகவலை பொறுத்து பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படும். மழை பாதிப்பு குறித்து முதலமைச்சரிடம் உடனுக்குடன் கூறிவருகிறோம். வானிலை மையம் தரும் தகவல்களைப் பொறுத்து பள்ளிகளுக்கு விடுமுறை பற்றி முடிவு எடுக்கப்படும். எதிர்பார்க்காத அளவு மழை பெய்துள்ளது. பெரும்பாலான இடங்களில் நீரை வெளியேற்றிவிட்டோம். மழை பாதிப்பு தொடர்பாக முதலமைச்சர் விஜயிடம் மணிக்கு ஒருமுறை தெரிவித்து வருகிறோம். சென்னையில் குறுகிய நேரத்தில் எதிர்பார்க்காத கனமழை. 20-க்கும் மேற்பட்ட



சுரங்கபாதையில் மழைநீர் வெளியேற்றம். பெரும்பாலான இடங்களில் தேங்கிய மழைநீர் வெளியேற்றம். பொதுமக்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை. ராட்சத மின் மோட்டார்கள் மூலம் மழைநீர் வெளியேற்றம். வானிலை ஆய்வு மைய தகவலை பொறுத்து பள்ளிகளுக்கு விடுமுறை. சுகாதாரத்துறை சார்பில் மருத்துவ முகாம்கள் அமைப்பு. வீடு வீடாக சென்று மருத்துவ பரிசோதனை செய்ய உள்ளோம். இது யாரையும் குறை சொல்லும் நேரம் அல்ல. அதிகாரிகள் இரவு முழுவதும் சிறப்பாகப் பணியாற்றியதால், மழைநீர் விரைவாக வெளியேற்றப்பட்டுள்ளது. இன்னும் பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை. அவற்றையும் விரைந்து முடிப்போம். மழை தீவிரமாக பெய்யும் நேரத்திலும் இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும். மழைநீர் வடிகால் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டதாக முந்தைய ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்த மழைக்காலம் முடிந்த பிறகுதான் அதன் நிலை தெரியவரும். கடந்த ஆட்சியில் ஏன் மழைநீர் தேங்கி நின்றது என்ற கேள்வி அனைவரிடமும் இருந்தது" என்றார்.

வடகிழக்கு பருவமழை: சென்னைக்கு தேசிய பேரிடர் மீட்புக் குழு அனுப்பி வைப்பு

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைத் துறை

சென்னை, அக்19: வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, சென்னையில் பேரிடர் அபாயங்களை எதிர்கொள்ளவும், அவசரக்காலங்களில் பொதுமக்களை பாதுகாக்கவும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைத் துறையின் கோரிக்கையை ஏற்று, ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே நகரிகுப்பத்தில் அமைந்துள்ள 04-வது தேசிய பேரிடர் மீட்புப் படை பட்டாலியனில் இருந்து இந்த மீட்புக் குழு சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழை காலங்களில் சென்னையில் கனமழை பெய்யும்போது, தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குதல், குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுதல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளில் உடனடியாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு, பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். நான்காவது தேசிய பேரிடர் மீட்புப் படை பட்டாலியனின் மூத்த கமாண்டன்ட் ஸ்ரீ அகிலேஷ் குமாரின் உத்தரவின் பேரில், இந்த மீட்புக் குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை வந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினருடன் இணைந்து அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அவசரகால மீட்பு மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து திடீர் கள ஆய்வு மேற்கொண்டார்.

பருவமழையின் போது ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் பிற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில், மீட்புப் படையினர் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கனமழையால் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்தால், அங்கு வசிக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பாக மீட்பது, வெள்ளத்தில் சிக்கியவர்களுக்கு உதவுவது மற்றும் அவசர கால மீட்புப் பணிகளை மேற்கொள்வது போன்ற பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபடுவர்.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்து, பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்காகப் பேரிடர் மேலாண்மைத் துறையினருடன் இணைந்து மீட்புப் படையினர் செயல்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னையில் மழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், தேசிய பேரிடர் மீட்புப் படையின் குழு அனுப்பி வைக்கப்பட்டிருப்பது, எதிர்பாராத வெள்ளப்பாதிப்புகளை விரைவாக எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, சென்னையில் பேரிடர் அபாயங்களை எதிர்கொள்ளவும், அவசரக்காலங்களில் பொதுமக்களைப் பாதுகாக்கவும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் அமைச்சர்கள் ஆய்வு

சென்னை, அக்.19: கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்து திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ரமேஷ் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

உலகப் பிரசித்திப் பெற்ற திருவண்ணாமலையில் அமைந்துள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் கார்த்திகை தீபத்திருவிழா ஆண்டுதோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டில் வரும் நவ.12-ஆம் தேதி முதல் நவ.28- ஆம் தேதி வரை விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான மகா தீபத்திருவிழா வரும் நவ.24- ஆம் தேதி நடைபெறும். தீபத்திருவிழாவைக் காண திருவண்ணாமலைமட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் வருகைத் தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தீபத்திருவிழாவை வெகு சிறப்பாக நடத்தும் நோக்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணைந்து பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள், மருத்துவ முகாம்கள், அன்னதானம் வழங்கும் இடங்கள், போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

இந்த நிலையில், கார்த்திகை தீபத்திருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் ஆகியோர் அதிகாரிகளுடன் இன்று (அக்.17) அருணாசலேஸ்வரர் திருக்கோயில் சுற்றியுள்ள மாடவீதி பகுதிகளில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளையும், செங்கம் சாலையில் அமையவுள்ளதற்காலிகபேருந்து நிலையத்தில் நடைபெற்றுவரும் முன்னேற்பாடு பணிகளையும் ஆய்வு செய்தனர். தொடர்ந்து அருணாசலேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்றுவரும்பணிகளையும், கிரிவல பாதையையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது, அசாம் மாநிலத்திலிருந்து அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு கொண்டு வரப்பட்ட கோயில் யானைக்கு 'நவச்சிவாயா' என அமைச்சர்கள் பெயர் சூட்டினர்.

அதைத் தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அதிகாரிகள் பங்கேற்ற கார்த்திகை தீபத்திருவிழாவிற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுகூட்டமும் அமைச்சர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் கார்த்திக்கை தீபத்திருவிழாவிற்கு உலகமெங்கிலும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து வருகிறார்கள். நாளுக்கு நாள் பக்தர்களின் வருகை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்கள், பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் ஆகியோர் எவ்வித இடையூறு இல்லாமல் தரிசனம் செய்யவும், கிரிவலம் செய்யவும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், அவர்களுக்கான பாதுகாப்பு வசதிகள் ஆகியநடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே அதற்கேற்றார் போல் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

மேன்மைமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், புதுச்சேரி
Criminal Appeal.No:73/2026
A.அண்ணலட்சுமி ..மேல்முறையீட்டாளர்
..எதிர்..
T.சிவக்குமார் ..எதிர்மனுதாரர்
அறிவிப்பு
புதுவை யூனியன் பிரதேசம், ரெட்டியார்பாளையம், கல்யாண சுந்தரம் நகர், 2வது மெயின் தெரு, எண்:34-ல் வசிக்கும் மேல்முறையீட்டாளர் புதுச்சேரி, விரைவு நீதிமன்றம் (N.I.ACT) நீதிமன்றத்தில் S.T.C.No: 2978/2021-ல் பிறப்பித்த தீர்ப்புக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு வரும் 20.11.2026 அன்று விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் எதிர்மனுதாருக்கு ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் நேரடியாகவோ (அ) வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் வாதிகள் கோரியபடி ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.
வே. கணபதி, பி.ஏ., பி.எல்
வழக்கறிஞர், புதுச்சேரி.
CONSEL FOR PLAINTIFF

இந்திய மக்களின் பேராதரவுடன்

முதல்வர் விஜய் பிரதமர் ஆவது உறுதி

அரசியல் நிபுணர்கள் கருத்து



முதல்வர் விஜய் செல்லும் இடங்கள் எல்லாம் மக்கள் திரண்டு வருகின்றனர். சமீபத்தில் அவர் ஆந்திர முதல்வர் சந்திக்கச் சென்றது அங்கும் விஜய்யை காண ஆயிரக் கணக்கான பொது மக்கள் திரண்டது இந்திய அரசியலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக மக்களின் பேராதரவோடு முதல்வர் பதவியில் கம்பீரமாக வீற்றிருக்கும்விஜய்விரைவில்பிரதமர் ஆவார் என்கின்றனர் தமிழ்நாடு ஊடகங்கள்மட்டுமினறிவடநாட்டு ஊடகங் களும் கூறி வருகின்றனர். இதற்கு சாட்சி அவர் செல்லும் இடங்கள் எல்லாம் மக்கள் குவிந்து வருகின்றனர். முதல்வர் விஜய் செல்லும்இடங்கள் எல்லாம்மக்கள் திரண்டு வருகின்றனர். சமீபத்தில் அவர் ஆந்திர முதல்வர் சந்திக்கச் சென்றது அங்கும் விஜய்யை காண ஆயிரக் கணக்கான பொது மக்கள் திரண்டது இந்திய அரசியலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உழத்து ஊழலற்ற, பெண்களுக்குப் பாதுகாப்பான, வெளிப்படையான தமிழ்நாட்டை மக்களுக்குத்தருவதேதங்களது ஒரே குறிக்கோள் என்பதேதவெக அரசின் முக்கிய குறிக்கோள். ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் அரசு செய்துள்ள மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் இதோ... ஆட்சிக்கு வந்து 60 நாட்கள்தான் ஆகிறது அதற்குள் என்ன செய்தீர்கள் எனக் கேட்பவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அரசு செயல்படுத்திய முக்கியத் திட்டங்களை முதல்வர் பட்டியலிட்டார்.அதன் முக்கிய அம்சங்கள் :

சமூக நலம் மற்றும் கடன்கள் தள்ளுபடி: ஏழை எளிய மக்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்களில் முதற்கட்டமாக ரூ.2,045 கோடி தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டுள்ளது. பெண்கள் பாதுகாப்புக்காக 'சிங்கப்பெண்' சிறப்புப் படையும், வீடுகளுக்கு 200 யூனிட் வரை கட்டணமில்லா இலவசமின்சாரமும்வழங்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் ஒழிப்புக்காகத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

மதுக்கடைகள் மூடல் மற்றும் அம்மா உணவகங்கள்: வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் அதற்கு அருகில் இருந்த 717 மதுக்கடைகள் அதிரடியாக மூடப்பட்டுள்ளன. அங்குப் பணியாற்றிய ஊழியர்களுக்கு வேறு கடைகளில் வேலை வழங்கப்பட்டுள்ளது. மேலும், கவனிக்கப்படாமல் விடப்பட்டிருந்த அம்மா உணவகங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நிர்வாகம் மற்றும் கனிமவளக் கண்காணிப்பு: பத்திரப்பதிவுத் துறையில் முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, வருகை இல்லா ஆவணப்பதிவு முறை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சட்டவிரோத கல்குவாரிகள் சீல் வைக்கப்பட்டு, ஆளில்லா விமானங்கள் (டிரோன்) மூலம் கனிமவளக் கண்காணிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. லஞ்சமற்றதமிழ்நாட்டை உருவாக்க அனைத்துத் துறைகளிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் மத்திய அரசுத் திட்டங்கள்: ஸ்கேன் மையங்களில் கருவுறுவதற்கு முன் மற்றும் பின் ஏற்படும் தவறுகளைக் கண்காணிக்க மருத்துவத் துறைக்கு 40 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசிடம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க, கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜல் ஜீவன் மிஷன் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 'ஜல் ஜீவன் மிஷன் 2.0' என்ற பெயரில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தொழில் முதலீடுகள்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் மைய விரிவாக்கத் திட்டம், கோவையில் மின்னணு பொருட்கள் உற்பத்தித் திட்டம் மற்றும் திருவள்ளூர் காட்டுப்பள்ளி எல் அன்ட் டி கப்பல் கட்டும் தளம் விரிவாக்கம் போன்ற திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் வெறும் 'சாம்பிள்'தான் எனக் குறிப்பிட்ட முதலமைச்சர் விஜய், இனிவரும் நாட்களில் படிப்படியாக உழைத்து ஊழலற்ற, பெண்களுக்குப் பாதுகாப்பான, வெளிப்படையான தமிழ்நாட்டை மக்களுக்குத் தருவதே தங்களது ஒரே குறிக்கோள் என்று தனது உரையில் உறுதிபடத் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.15,037 கோடி முதலீட்டில் புதிய உற்பத்தி ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில், முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் இந்த முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. தவெக ஆட்சி அமைத்து காலம் உருண்டோடிவிட்டது. தமிழக வெற்றிக் கழகமும், அதன் தலைமை ச.ஜோசப் விஜய்யும் தமிழக ஆட்சி அரியணைக்கு புதிய வரவுதான். என்றாலும் மிகப் பெரிய எதிர்பார்ப்பு, அதனினும் பெரிதான மக்கள் ஆதரவுள்ள வரவு என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தொகுதி மறுவரையறைக்கு எதிரான தனித் தீர்மானத்தை முதலமைச்சர் விஜய் கொண்டு வந்தார். இந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து... தென்னிந்தியாவில் இருந்து ஒரு பாரத பிரதமர் உருவாக்கப்பட வேண்டும்" என்று கூறி தேசிய அரசியலில் புதிய விவாதத்தை தொடங்கி வைத்துள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியைப் பிடித்துள்ள சூழலில், ஆதவ் அர்ஜுனாவின் இந்தப் பேச்சு, முதல்வர் விஜய் எதிர்காலத்தில் பிரதமர் பதவியை அல்லது தேசிய அளவிலான அரசியலை குறிவைக்கிறாரா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. மத்திய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதன் மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது பேசிய ஆதவ் அர்ஜுனா, "தற்போதைய அரசியல் சூழலில் 5 முதல் 6 இந்தி பேசும் வடமாநிலங்கள் ஒன்றிணைந்தாலே இந்தியாவின் பிரதமரை தேர்ந்தெடுத்துவிடும் சூழல் உள்ளது. மக்கள்தொகையை கட்டுப்படுத்தி, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்த தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைகள் இதனால் பறிபோகும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி வளர்ந்த மாநிலமாக திகழ்கிறது. ஆனால், நாட்டின் மிக உயரிய அதிகார பீடத்தில் அது இன்னும் முழுமையாக அமரவில்லை. இந்த நிலை மாறி, எதிர்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்தே ஒரு பிரதமர் வர வேண்டும். நமது குரல் சட்டமன்றத்தில் ஒலித்தது போல், நாடாளுமன்றத்திலும் ஒருநாள் ஒலிக்க வேண்டும்" என்ற வாதத்தையும் முன்வைத்தார்.

மேலும், நாடாளுமன்றத்தில் இந்த மசோதா வரும்போது திமுக, காங்கிரஸ் உட்பட தமிழகத்தை சேர்ந்த அனைத்து 39 எம்.பி.க்களும் வெளிநடப்பு செய்யாமல், மசோதாவுக்கு எதிராக ஒன்றிணைந்து வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் தொகுதி மறுவரையறை தீர்மானத்திற்கு அதிமுக, பாஜக, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. இருந்தபோதும் தவெக, திமுக, காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டைத் தாண்டி வட இந்தியா முழுவதும் சாமானிய மக்களுக்கும் தெரிந்த முகமாக விஜய் மாறினார்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் வென்று தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சி அமைத்துள்ள முதலமைச்சர் விஜய், மாநில உரிமைகளுக்கான தனது குரலை தேசிய அளவில் அழுத்தமாக பதிவு செய்யவே தொகுதி மறுவரையறை தீர்மானத்தை கையில் எடுத்துள்ளார் என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

தென்னிந்தியாவின் உரிமைகளை பேசும் ஒரு மாநில கட்சியின் தலைவராக விஜய் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்போது, அது 2029 மக்களவை தேர்தலில் தென்னிந்திய மாநிலங்களின் கூட்டமைப்பில் அவருக்குப் பெரிய செல்வாக்கு ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

தற்போதைய நாடாளுமன்ற இடங்களின் அடிப்படையில், ஒரு மாநில கட்சியின் தலைவர் பிரதமராவது என்பது 'தொங்கு நாடாளுமன்றம்' ஏற்பட்டு, மாநிலக் கட்சிகளின் ஆதரவோடு மூன்றாவது அணி அமையும் சூழலில் மட்டுமே சாத்தியம். தொகுதி மறுவரையறை அமலுக்கு வந்தால், வட மாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்பதால், தென் மாநிலத் தலைவர்கள் பிரதமராவது மேலும் கடினமாகும். இதனாலேயே, இந்த தீர்மானம் மற்றும் "தென்னிந்திய பிரதமர்" முழக்கத்தை தவெக இப்போதேதீவிரமாகமுன்னெடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. இந்திய மக்களின் பேராதரவோடு முதல்வர் விஜய் பிரதமர் பதவியை அலங்கரிப்பார் என்கின்றனர் அரசியல் நிபுணர்கள்.



பருவமழையை முன்னிட்டு மலைப்பகுதிகள் மற்றும் நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் சிறப்புக் கவனம்

தமிழக அரசுக்கு குவியும் பாராட்டுக்கள்



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மலைப்பகுதிகள் மற்றும் நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் சிறப்புக் கவனம் செலுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் விஜய் அறிவுறுத்தி உள்ளதற்கு பல்வேறு தரப்பினர் தங்களது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, தெற்கு உள்மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களான கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், மதுரை, நீலகிரி, சிவகங்கை, தென்காசி, தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்தும், டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து சமீபத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

கூட்டத்திற்குப் பின் தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில் கூறி இருந்ததாவது... இந்த ஆய்வுக் கூட்டத்தில், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் தெற்கு உள்மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அபாயத்திற்கேற்பவும், இடத்திற்கேற்பவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்,

குறிப்பாக, நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில், கனமழையின் காரணமாக ஏற்படக்கூடிய நிலச்சரிவு, மண் சரிவு, மலைச்சரிவுகளில் நிலையற்ற தன்மை, சாலைகளில் மண் மற்றும் பாறைகள் சரிந்து போக்குவரத்து பாதிப்பு போன்ற அபாயங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தினார்.

நிலச்சரிவு ஏற்படக்கூடிய அனைத்து இடங்களையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும், குறிப்பாக மலைச்சரிவுகள், சாலை வெட்டுப் பகுதிகள் மற்றும் ஏற்கனவே அபாயம் கண்டறியப்பட்ட இடங்களில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும், கனமழைக்கு முன்னரும், கனமழை பெய்யும் காலங்களிலும் அபாயத்திற்குள்ளாகும் மலைச்சரிவுகள் மற்றும் சாலைப் பகுதிகளை ஆய்வு செய்திட வேண்டும் என்றும், மண் விரிசல், சரிவு, நீர்க்கசிவு உள்ளிட்ட நிலையற்ற தன்மையின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கொடைக்கானலில் மேற்கொள்ளப்பட்ட Soil Nailing போன்ற சரிவு உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு, நிலச்சரிவு தடுப்பு மற்றும் மலைச்சரிவு உறுதிப்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்கவேண்டுமென்றும், மலைப்பகுதிகளுக்கான முக்கிய சாலைகள் மற்றும் போக்குவரத்து இணைப்புகளைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும்என்றும்,நிலச்சரிவு அல்லது மண், பாறைகள் மற்றும் கழிவுகள் சரிவதால் சாலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டால், உடனடியாக அகற்றுவதற்கான இயந்திரங்கள், பணியாளர்கள் மற்றும் தேவையான உபகரணங்களை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்என்றும் அறிவுறுத்தினார்.

அபாயத்திற்குள்ளாகும் மலைப்பகுதிகளில் மீட்பு மற்றும் வெளியேற்ற நடவடிக்கைகளுக்கான பணியாளர்கள் மற்றும் உபகரணங்களை முன்கூட்டியே நிலைநிறுத்த வேண்டும் என்றும், முதல்நிலை மீட்புப் பணியாளர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தேவையான பயிற்சியளித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தி உள்ளார்.

அபாயம் உள்ள பகுதிகளுக்கு அருகிலுள்ள நிவாரண முகாம்களை ஆய்வுசெய்து, அவை உடனடியாக பயன்படுத்தக்கூடியநிலையில்இருப்பதை உறுதிசெய்திட வேண்டும் என்றும், மலைப்பகுதிகளில்தொலைத்தொடர்பு பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதால் வி.ஹெச்.எஃப். கருவிகள் மற்றும் சேட்டிலைட் போன்கள் செயல்படும் நிலையில் இருப்பதை உறுதிசெய்திட வேண்டும் என்றும், முக்கியமான அபாயப் பகுதிகளில் ஒத்திகை மற்றும் வெளியேற்றப் பயிற்சிகளை நடத்தி, அவசரகாலத்தில் மேற்கொள்ள வேண்டிய மீட்பு, வெளியேற்றம் மற்றும் சாலைத் தொடர்பை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை உறுதிசெய்திட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் உத்தர விட்டார். முதல்வர் விஜய்யின் இந்த அறிவுறுத்தலுக்கு பொது மக்களும், இயற்கை ஆர்வலர்களும் தங்களது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.



நிலச்சரிவு, மண் சரிவு, மலைச்சரிவுகளில் நிலையற்ற தன்மை, சாலைகளில் மண் மற்றும் பாறைகள் சரிந்து போக்கு வரத்து பாதிப்பு போன்ற அபாயங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும்

ஆயுதப்பூஜை சிறப்பு மலர்

DHARAN FURNITURE
www.dharangarmentfurnitures.com
Manufacturers of
Line Production Table , Cutting Tables,
Checking Tables, Packing Tables,
Storage Racks, Busbar Tables,
Backrest Stools & Benches
Powder Coating & Laser Cutting Jobwork



PA பழனியப்பா ஏஜென்சீஸ்
மொத்த விற்பனை கடை
உங்கள் கட்டுமான தேவைகளுக்கு நாங்கள் உறுதுணை!
குறைந்த விலை! நிறைந்த தரம்!
LOW PRICE
BEST QUALITY
FAST DELIVERY
அனைத்தும் ஒரே இடத்தில்!
பெயிண்ட்
சிமெண்ட்
எலக்ட்ரிக்கல் பொருட்கள்
பைப் மற்றும் ஃபிட்டிங்ஸ்
சானிட்டரி பொருட்கள்
BRILA OPUS
UltraTech
Dalmia
JK WHITE CEMENT
மொத்த விலையில் தரமான பொருட்கள்!
விரைவான டெலிவரி
சிறந்த விலை
நம்பகமான சேவை
FAST DELIVERY
கண்டமங்கலம்
காவல் நிலையம் எதிரில்
தொடர்புக்கு:
81225 27375











தினகுரல்

உயர்ந்த வாழ்க்கை நெறியை உணர்த்தும் சரஸ்வதி வழிபாடு



கேட்ட வரங்களை அள்ளித்தரும் அன்னை

நவராத்திரி பண்டிகையானது, ஒரு மனிதனுக்கு வீரம் (துர்கா), செல்வம் (லட்சுமி), ஞானம் (சரஸ்வதி) ஆகிய மூன்றும் அவசியம் என்பதை உணர்த்துகிறது. முதல் 3 நாட்கள் துர்கா தேவியையும், அடுத்த 3 நாட்கள் லட்சுமியையும், கடைசி 3 நாட்கள் சரஸ்வதி தேவியையும் வழிபடுகிறோம்.

புராணங்களின் படி, நவராத்திரியின் 9-வது நாளில், அன்னை பராசக்தி அனைத்து தெய்வங்களிடம் இருந்தும் பெற்ற ஆயுதங்களுக்குப் பூஜை செய்து வழிபட்டதை குறிக்கும் விதமாகவே ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. இதை நினைவுபடுத்தும் வகையில், நாம் அன்றாட

நவராத்திரியின் 9-வது நாளில், அன்னை பராசக்தி அனைத்து தெய்வங்களிடம் இருந்தும் பெற்ற ஆயுதங்களுக்குப் பூஜை செய்து வழிபட்டதை குறிக்கும் விதமாகவே ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. இதை நினைவுபடுத்தும் வகையில், நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும், நம் வாழ்வாதாரத்துக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்கள் மற்றும் கருவிகளை வைத்து இந்த நாளை நாம் கொண்டாடுகிறோம்.



நவ ராத்திரி விழாவின் நிறைவாக 10-வது நாளில் அம்பிகை மகிஷனை வதம் செய்து வெற்றி பெற்றதை கொண்டாடும் விதமாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

அனைத்தையும் சுத்தம் செய்து, திருநீறு, சந்தனம், குங்குமம் வைத்து அலங்கரிக்க வேண்டும். மாவிலை தோரணங்கள் கட்டுவது விசேஷம்.

பூஜை அறை : பூஜை அறையை சுத்தம் செய்து, சுவாமி படங்களுக்கு சந்தனம், குங்குமம் வைத்து, பூக்களால் அலங்கரிக்க வேண்டும். ஞானத்தின் தெய்வமான சரஸ்வதி தேவியை வழிபடுவதற்கு முன்பு, விநாயகரை வணங்குவது அவசியம். மஞ்சளில் பிள்ளையார் பிடித்துவைத்து, குங்குமப் பொட்டு, அருகம்புல் வைத்து வழிபட்ட பின்னரே சரஸ்வதியை வணங்க வேண்டும்.

தொழிலுக்கு மரியாதை : 'செய்யும் தொழிலேதெய்வம்'என்ற சொல்லுக்கு ஏற்ப ஆயுத பூஜை அன்று நம்முடைய தொழில் கருவிகளை வணங்க வேண்டும். பூஜை அறையில் புத்தகங்கள், பேனாக்கள், வீட்டு உபயோக கருவிகளான சுத்தி, அரிவாள்மனை போன்றவற்றை சந்தனம், குங்குமம் வைத்து அலங்கரிக்கவும்.

தொழில் நிறுவனங்கள், தங்கள் தொழில் சார்ந்த இயந்திரங்களுக்குப் பொட்டு வைத்து அலங்கரித்து வணங்க வேண்டும். வாகனம் வைத்திருப்பவர்கள் தங்கள் வாகனங்களில் சந்தனத்தை தெளித்து, பூ வைத்து வழிபடலாம்.

நைவேத்தியம் : நைவேத்தியத்துக்காக வாழை இலையில் பொரி கடலை, அவல், வடை, பாயாசம் என பல வகையான பழங்களை வைத்துப் பூஜையை தொடங்க வேண்டும். பூஜை செய்த இடங்களில்மணியடித்து,நீரினால்3 முறை சுற்றி நைவேத்தியம் செய்து, ஆயுதங்கள் மற்றும் புத்தகங்களுக்கும் நிவேதனம் செய்த பிறகு, சூடம் ஏற்றி தீபாராதனைசெய்துவழிபாட்டை நிறைவு செய்ய வேண்டும். பின்னர் விபூதி, குங்குமம் மற்றும் பொரிக்கடலை ஆகியவற்றை அனைவருக்கும் விநியோகிக்க வேண்டும். சரஸ்வதி பூஜை நேரம் : இந்த ஆண்டு சரஸ்வதி பூஜை இன்று கொண்டாடப்படுகிறது. எனவே, காலை 9 மணிக்கு மேல் 12 மணிக்குள் பூஜை செய்ய உகந்த நேரம் ஆகும். அதேபோல், நவராத்திரி விழாவின் நிறைவாக 10-வதுநாளில்அம்பிகைமகிஷனை வதம் செய்து வெற்றி பெற்றதை கொண்டாடும் விதமாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. சரஸ்வதி தேவி வெறும் கல்வி மற்றும் கலைகளுக்கான தெய்வம் மட்டுமல்ல, அவர் மனிதர்களுக்கு உயர்ந்த வாழ்க்கை நெறியை போதிக்கும் ஒரு மாபெரும் அன்னையாக விளங்குகிறார். கேட்ட வரங்களை அள்ளித்தருகிறார்.

புத்தகங்களுக்கும் நிவேதனம் செய்த பிறகு, சூடம் ஏற்றி தீபாராதனை செய்து வழிபாட்டை நிறைவு செய்ய வேண்டும். பின்னர் விபூதி, குங்குமம் மற்றும் பொரிக்கடலை ஆகியவற்றை அனைவருக்கும் விநியோகிக்க வேண்டும்

வாழ்வில் பயன்படுத்தும், நம் வாழ்வாதாரத்துக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்கள் மற்றும் கருவிகளை வைத்து இந்த நாளை நாம் கொண்டாடுகிறோம்.

ஆயுத பூஜைக்கான வழிபாட்டு முறைகள் :

வீட்டை தூய்மைப்படுத்துதல் : பூஜை தொடங்கும் முன் வீடு முழுவதும் சுத்தமாகதுடைத்து, நிலை, கதவுகள், ஜன்னல்கள்



OM NAMO NARAYANI



SRI NARAYANI
HOSPITAL & RESEARCH CENTRE
Sripuram, Vellore - 55

Our SPECIALITIES



- Anaesthesiology
- Andrology
- Cardiology
- Cardiovascular & Thoracic surgery
- Community Medicine
- Chronic Pain Management
- Diabetology
- Dental
- Dermatology
- Emergency & Trauma Care
- Endocrinology
- ENT
- General Medicine
- General Surgery
- Medical Gastroenterology
- Geriatric Medicine
- Multidisciplinary Critical Care Unit
- Medical Oncology
- Nephrology
- Neurology & Neurosurgery
- Ophthalmology
- Orthopaedics & Spine Surgery
- Obstetrics & Gynaecology
- Pulmonary Medicine
- Psychiatry
- Paediatrics
- Paediatric Surgery
- Plastic & Reconstructive Surgery
- Renal transplant
- Rehabilitation
- Rheumatology
- Reproductive Medicine
- Surgical Gastroenterology
- Surgical Oncology
- Urology
- Vascular & Endovascular Surgery

Our FACILITIES

- MRI (1.5 Tesla)
- CT Scan
- Cath Lab
- Dexa Scan
- Dex Robotics
- 4D Ultrasound
- Endoscopy
- Colonoscopy
- Digital Mammography
- Bronchoscopy
- Thoracoscopy
- Fluoroscopy
- Physiotherapy
- Lithotripsy
- 3D-HD Laparoscopy

24X7 SERVICES

- Pharmacy
- Blood Bank
- Imaging
- Home Care Services
- Advanced Trauma & Emergency
- Ambulance Services
- Cafeteria & Room Service

For Appointment ☎ 99942 12859 info@snhrc.org www.snhrc.org

Private & Government Insurance Available

NLC INDIA


என்எல்சி இந்தியா நிறுவனம்
('நவரத்னா' - இந்திய அரசு நிறுவனம்)

என்எல்சி இந்தியா நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு சாதனைகள்!

நாட்டின் வளர்ச்சியில் முன்னணி நிறுவனமாய் திகழும் என்எல்சிஐஎல்!

என்எல்சி இந்தியா நிறுவனம், கடந்த 10 ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொறுப்புணர்வு இலக்கைக் காட்டிலும் 17.34% கூடுதலாக நிதி வழங்கி சாதனை படைத்துள்ளது.

- என்எல்சி இந்தியா நிறுவனம், கடந்த பத்து ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) இலக்கான ரூ.514.82 கோடியைக் கடந்து சமூக நலனுக்காக மொத்தம் ரூ. 604.09 கோடியை வழங்கி சாதனை படைத்துள்ளது.
- ஆண்டுதோறும் 1.2 லட்சம் கிராமப்புற மக்களுக்கு இலவச அவசர மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.
- சிறுநீரக நோயாளிகள் பயன்பெறும் வகையில், கடலூர் அரசு மருத்துவமனையில் ரூ.2.5 கோடியில் டயாலிசிஸ் மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில், 141 கிராமங்களுக்கு உட்பட்ட 1.5 லட்சம் மக்கள் சிகிச்சை பெறும் வகையில் ரூ.2.5 கோடியில் தரம் உயர்த்தப்பட்ட அவசர சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது.
- ரூ.83.88 லட்சம் மதிப்பீட்டில், கேப்பர் ஹில்ஸ் அரசு மருத்துவமனையில் 26 படுக்கைகள் கொண்ட காசநோய் (TB) சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ. 2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட தாய்-சேய் நலத்-திட்டம் மூலம் 75,000 பேர் பயனடைந்துள்ளனர்.
- கடலூர் மாவட்டத்தில் 2,000-க்கும் மேற்பட்ட வளரிளம் பெண்களுக்காக ரூ. 15 லட்சம் செலவில் 'ரத்தசோகை இல்லா கடலூர்' சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.



- நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகளுக்குச் செயற்கை உடல் உறுப்புகளும் உதவி உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், விருதுநகர் மாவட்டத்தில் 288 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 1 கோடி செலவில் சிறப்பு நலத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் ரூ.11.87 கோடிக்கும் அதிகமான செலவில் ஊரகப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- மணிமுக்தா நதி மறுசீரமைப்பு, சிறுமலை தடுப்பணை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டதன் மூலம் 1.5 லட்சம் கிராமப்புற மக்கள் பயனடைகின்றனர்.
- நெய்வேலி ஐவஹர் அறிவியல் கல்லூரிக்குக் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.17.41 கோடி வழங்கப்பட்டு 6,195 மாணவர்களின் உயர்கல்வி உறுதி செய்யப்பட்டுள்ளது.
- 140 அங்கன்வாடி மையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 'ஸ்நேகா' வாய்ப்புப் பள்ளி மூலம் 126 சிறப்புக் குழந்தைகளுக்கு மறுவாழ்வுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாணவிகளுக்குக் கல்வி உபகரணங்களும், ரூ. 7.24 லட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளன.
- கடலூர் மாவட்ட அரசுப் பள்ளிகளில் ரூ. 39.63 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட 10 ஸ்மார்ட் வகுப்பறைகள் மூலம் 6,643 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- கோணான்குப்பம் பள்ளியில் 10 ஸ்மார்ட் போர்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.
- கரூர் ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரில் ரூ.1.85 கோடியில் 9 வகுப்பறைகள் கொண்ட தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்ப (ICT) ஸ்மார்ட் வகுப்பறை வளாகமும் அமைக்கப்பட்டுள்ளன.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தரமான கல்வி மற்றும் ஊரக மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்வதில் என்எல்சிஐஎல் எப்பொழுதும் முன்னிலையில் நிற்கிறது. எங்களின் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வுப் பணிகள் தொடர்கின்றன. சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வில் ஒரு முன்மாதிரி பொதுத்துறை நிறுவனமாக என்எல்சிஐஎல் தொடர்ந்து செயல்படும்!

என்எல்சி இந்தியா நிறுவனம்
('நவரத்னா' - இந்திய அரசு நிறுவனம்)

தலைமை அலுவலகம் : வட்டம்-1, நெய்வேலி, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு - 607 801.
பதிவு அலுவலகம் : நெய்வேலி இல்லம்' எண்.135, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600 010. இணையதளம் : www.nlcindia.in

DINAKURAL-TAMIL DAILY Owned and Published by G.Sathiyanarayanan from No.13, North Wall Road. Mint Terminus, Kondithopu, Chennai-600 079. Printed by: P.Basker at Ambiga Printers. No.37/19, Ayalur Muthiah Street, Kondithope. Chennai. -600 079. Ph.04142-236004 Fax :04142-236004 Editor : G.Sathiyanarayanan, email : dinakural.Sathiya@gmail.com. dinakuralnews@yahoo.com.dinakural .chennai@yahoo.in